அதிகாரம் 2

# கிறிஸ்து தீர்க்கதரிசிகளையும் மற்றும் தேவதூதர்களையும் விட மேலானவர்

# (பகுதி 2)

## கிறிஸ்து, மனிதனின் இரட்சகர், தேவதூதர்களுக்கு மேலானவர் (2:1-18)

### புறக்கணிப்புக்கு எதிரான எச்சரிக்கை (2:1-4)

**[1]ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு,
அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். [2]ஏனெனில்,
தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச்
செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக
அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க. [3]முதலாவது கர்த்தர்
மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே
நமக்கு உறுதியாக்கப்பட்டதும், [4]அடையாளங்களினாலும்
அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும்,
தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின்
வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற
இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம்
கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித்
தப்பித்துக்கொள்ளுவோம்.**

இந்தப் பிரிவு எல்லா வழிகளில் இருந்தும் விலகிச் செல்வது முதல் தேவனுடைய வார்த்தையை மீறுவது வரையிலான பாவங்களுக்கு விரோதமான எபிரெயர் எச்சரிக்கையில் ஐந்து அறிவுரைகளில் முதலாவதாக உள்ளது (12:14-29). "அறிவுரையின் ஒரு வார்த்தையை"

எழுத்தாளன் வழங்க ஆரம்பித்தான் (13:22), மேலும் அவன் அந்த நோக்கத்திற்காகக் காத்திருந்தான்.

**வசனம் 1.** வசனங்கள் 1 முதல் 4 வரை பெரும்பாலும் ஒரு அடைப்புக் குறியீடாகப் பார்க்கப்படுகிறது; ஆனால், உண்மையில், இவைகள் ஆகையால் என்பதின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு இருப்பதால், அத்தியாயம் 1-ல் **வழங்கப்பட்டதன் காரணத்திற்கு** மேலும் ஒரு முடிவை உருவாக்குகிறது. அவன் அதைப் பற்றி இன்னும் சொல்ல வேண்டும் என்றாலும், தேவதூதர்களால் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டதுடன் ஒப்பிடவில்லை என்ற உறுதியுடன் (வசனம் 2) எழுத்தாளன் தனது விரிவான வாதத்தை முடித்தான். புதிய உடன்படிக்கை அளிக்கிற இரட்சிப்பை நாம் புறக்கணித்தால், தப்பிச் செல்வதற்கு வாய்ப்பு இல்லை (வசனம் 3).

வசனம் 5 தொடங்கி, இந்த உபதேச-நிருபம், மனிதகுலத்தின் தாழ்வான நிலைக்கு மாறி, கிறிஸ்து எவ்வாறு மனித நிலையில் உட்பிரவேசித்து நம்மிடம் சேர்ந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. தேவதூதர்களுக்கும் மேலானவராகிய, பழைய நியாயப் பிரமாணத்தை மத்தியஸ்தப்படுத்தி, நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த ஒருவரால் நாம் அதிக ஆசீர்வாதங்களை பெற்றுள்ளதால், நம்மிடம் அதிகமாக எதிர்பார்ப்பதாக ஆசிரியர் அறிவுறுத்தினார். இயேசு கற்றுக் கொடுத்த அதே நியமம் தான் உள்ளது; எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும் (லூக். 12:47, 48; மத். 11:20-24). நாம் கிறிஸ்துவில் அதிகமான வெளிப்பாடுகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கிறோம்; எனவே, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாக நிலைத்திருக்க வேண்டிய பொறுப்பும் நமக்கு மிக அதிகமாக இருக்கிறது.

எப்போதுமே இறையியலில் இருந்து வாழ்க்கைக்கு ஒரு பயன்பாடு உருவாக்க வேண்டும், இங்கு அதை உள்ளடக்குவதில் எபிரெய எழுத்தாளன் கவனமாக இருந்தான். அவன் இந்த புத்தகம் முழுவதிலும் இறையியல் பயன்பாட்டைத் தொடர்ந்து கொண்டு சென்றான். கிறிஸ்துவின் மகத்துவத்தை ஒப்புக்கொண்டு, அந்த உண்மையின் முக்கியத்துவத்தை வாழ்க்கைக்குப் பயன்படுத்தாவிட்டால், அந்த பெரிய உண்மை ஒரு வாசகருக்கு ஏறக்குறைய பயனற்றதாகிவிடும். பாவம் நிறைந்த மனிதகுலத்தை மீட்பதற்காக தமது குமாரனை உலகத்திற்கு அனுப்பி, தேவனுடைய அளவிட முடியாத கிருபையை வெளிப்படுத்தியதன் காரணமாக, நாம் மிகவும் ஜாக்கிரதையுடன் கவனித்து சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய ஒரு தார்மீகக் கடமையில் உள்ளோம்.

**மிகுந்த ஜாக்கிரதையுடன்** (περισσῶς, *பெரிசோஸ்*) என்பது “மிகவும் சாத்தியமான கவனத்துடன்” என்னும் பொருள் உணர்வில்

உபயோகிக்கப்பட்டுள்ளது. பிலிப்புவின் மொழிபெயர்ப்பு “எனவே, நாம் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்” என்பதாக உள்ளது.

நாம் “மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய்” இருக்க வேண்டும் என்பதால், நாம் அப்படி இல்லாவிட்டால் இழந்து போனவர்களாய் இருப்போம் என்னும் குறைந்தபட்ச அறிவிப்பு இருக்கிறது. இந்த அறிவுரைக்கு மிகுந்த ஜாக்கிரதையாக இல்லாதவர்கள் நித்தியத்தை பற்றி கவலையற்றவர்கள்!

**நாம் கேட்டவைகளைக்** குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் எதைக் கேட்டிருக்கிறோம்? நற்செய்தியில் உள்ளடங்கி இருப்பவை (அல்லது சுவிசேஷம்) என இங்கு புரிந்து கொள்ளப்படுகிறது. சுவிசேஷம் என்பது நான்கு அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டிருப்பதாக வரையறுக்கப்படுகிறது. முதலாவதாக, நற்செய்தியின் *சாராம்சம்* அத்தகையது என்பதற்காக நாம் நம்புகிறோம் என்ற உண்மைகளை அது கொண்டுள்ளது (1 கொரி. 15:1-4). இரண்டாவதாக, நாம் நம்புகிற பரலோக நம்பிக்கை, நித்திய ஜீவன், உயிர்த்தெழுதலில் சரீரத்தின் மீட்பு மற்றும் இந்த வாழ்க்கையில் தேவனுடைய முன் திட்டம் ஆகிய *வாக்குறுதிகளை* அது கொண்டிருக்கிறது (ரோமர் 8:24; தீத்து 1:2). மூன்றாவதாக, நாம் கீழ்ப்படிந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய *கட்டளைகளைக்* கொண்டுள்ளது (மத். 28:19, 20; மாற்கு 16:15, 16; 2 தீமோ. 2:2). நான்காவது, அது பயப்படத்தக்க காரணத்தை நமக்குக் கொடுத்து, கீழ்ப்படியாதவர்களுக்கான *தண்டனையையும்* குறிக்கிறது (2 தெச. 1:7-9; மத். 25:31, 46; ஒப்பிடுக, எபி. 10:26-29 மற்றும் 12:28, 29).

நாம் கேட்டிருக்கிற சுவிசேஷத்தை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனித்திருக்க வேண்டும், **ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு**, இந்தச் சொற்றொடர் “எந்த நேரத்திலும் விட்டு விலகாதபடிக்கு” (KJV); “விட்டுச் செல்லாதபடிக்கு” (NKJV) மற்றும் “நாம் விட்டு விலகிச் செல்லாதபடிக்கு” (NIV) என்று பலவிதமாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சொற்றொடரின் துல்லியமான அர்த்தம் சர்ச்சைக்குரியதாய் இருக்கிறது. நாம் சுவிசேஷத்திலிருந்து விலகிச் செல்வோமா அல்லது சுவிசேஷம் நம்மிடமிருந்து விலகுமா? தன்னுடைய வாசகர்களை “கவனிக்க வேண்டும்!” என்று அறிவுறுத்தும் பொழுது எழுத்தாளன் தன்னையும் சேர்த்துக் கொண்டான்.

“விட்டு விலக” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை சொல்லர்த்தமாக “கடந்து ஓட” என்ற பொருளுடன் புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது. (இதேபோன்ற எபிரெய வார்த்தை நீதி. 3:21-ல் பயன்படுத்தப்படுகிறது.) இது παραρρέω, (பாராரியோ) என்பதன் செயப்பாட்டு வினைச்சொல்லின் கருத்துப்

புனைவியலாகிய அயோரிஸ்ட் என்பதாகும். இந்த விலகுதல் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன: ஒரு கப்பல் நங்கூரமிட்ட இடத்தில் இருந்து விலகி, அழிவை நோக்கி விலகுதல், கவனக்குறைவாக நீந்தும் ஒருவரின் விரலில் இருந்து விலகும் ஒரு மதிப்புமிக்க மோதிரம்; அல்லது நீண்ட தூரம் ஓடுபவர் செல்லும் மார்க்கத்தில் ஒரு தவறான திருப்பத்தை எடுத்துக்கொள்ளுதல் ஆகியன. ஒரு பெரிய விசைப்படகு ஓக்லஹோமா பாலத்தை அடித்துத் தாக்க அனுமதிக்கப்பட்டபோது, இத்தகைய விலகுதலின் சோகம் மே 2002 இல் தெளிவான முறையில் விளக்கப்பட்டுள்ளது. பாலத்தின் ஒரு பகுதி தகர்ந்து ஆற்றில் விழுந்தது, அந்த நேரத்தில் பல கார்கள் தண்ணீரில் விழுந்து பயணிகள் மூழ்கிவிட்டனர்.

எனவே, இந்த வார்த்தையின் யோசனையாவது, நாம் ஆவலுடன் நம் வாழ்வில் கற்றுக் கொண்டவைகளில் நங்கூரமிட்டு நம் வாழ்க்கையாகிய கப்பலை ஒருபோதும் துறைமுகத்தை விட்டு கடந்து சென்று உடைந்துபோக ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. "இங்கே வினைச்சொல்லின் துல்லியமான உருவகமான சக்தி எதுவாக இருந்தாலும், சுவிசேஷத்தைக் கேட்டு, அதை ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள், தங்கள் வாழ்க்கைத் தொழிலை கைவிட சோதனைக்கு இடம் கொடுத்தால் அவர்களுடைய நிலைமை நம்பிக்கையற்றது"[1] என எஃப். எஃப். புரூஸ் கூறுகிறான்.

**வசனம் 2. தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனம்** என்ற சொற்றொடர் ஒரு பிரிவைத் தொடங்குகிறது என்பது வழிவிலகிப் போகிறதல்ல, ஆனால் உச்சகட்டத்தில் செயல்படுகிறது மற்றும் இதற்கு முன் என்ன நடந்தது என்பதற்கு தேவையான முடிவாக இருக்கிறது. இந்த அறிவுரை நிருபத்தின் சாராம்சத்தைப் பொறுத்தது, இது வாசகர்களை விசுவாசத்திலிருந்து விலகிவிடாமல் தடுக்கிறது.

நியாயப்பிரமாணம் கொடுப்பதில் தேவதூதர்கள் உதவினார்கள் என்பது பொதுவாக எழுத்தாளனின் காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த யோசனை ஊக்கமளித்த கருத்து மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது (அப். 7:38, 53; கலா. 3:19). நியாயப்பிரமாணத்தை அளிப்பதில் தேவதூதர்கள் உதவி செய்திருந்தனர் என்பது புரிந்து கொள்ளப்படவில்லை என்றால், வாசகர்களோ அல்லது கேட்கிறவர்களோ, இயேசு தேவதூதர்களை விட உயர்ந்தவர் என்ற ஆசிரியரின் வாதத்தை கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

"தேவதூதர்கள் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனம்" **மாற்ற முடியாது** (βέβαιος, *பெபையாஸ்*), என்பது, "உறுதியாய்" (NKJV), "சரியானதாக" (RSV), அல்லது "பிணைப்பு" (NIV) என்று இருந்திருந்ததாக கூறப்பட்டது. நியாயப்பிரமாணம் பற்றிய எல்லாம் நிருபத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும்; கீழ்ப்படியாமை குறிப்பிட்ட தண்டனையைக் கொண்டு வந்தது என்று இந்த விளக்கம் குறிக்கிறது.

கீழ்ப்படியாமைக்கு உட்பட்ட தண்டனையினாலே நியாயப்பிரமாணம் நிரூபிக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டு சரித்திரத்தின் பெரும்பகுதி இந்த உண்மையை விவரிக்கிறது. நீதியுள்ள ராஜாக்களைவிட பொல்லாத ராஜாக்கள் எப்போதும் அரசாட்சியில் மிகக் குறுகிய காலங்களைக் கொண்டிருந்தனர் என்பது இந்த கருத்தின் உண்மையைக் கொண்ட ஒரு விஷயமாகும்.

எண்ணாகமம் 15:30 தன்முனைப்புடைய பாவங்களுக்கான அல்லது "உறுதியாக." செய்த பாவங்களுக்கான தண்டனைகளைக் குறித்துரைக்கிறது. அந்த வகையான பாவம் ஒருவேளை "மனப்பூர்வமாக பாவம் செய்வதற்கு" நிகரானதாக இருக்கும் (எபி. 10:26). முழுமையான புரிந்துணர்வுடன் செயல்பட்ட கலகம்பண்ணுகிற பாவம் என்பது சிறிது காலத்திற்கு அனுமதிக்கப்படுகிறது என்று தெரிகிற தேவனுக்கு விரோதமான பாவம் அல்லது மன்னிப்புக்கு எந்த வாய்ப்பும் இல்லாத பாவம் ஆகும். ஒவ்வொரு கட்டளையிலும், தேவன் கீழ்ப்படியாமைக்கு தண்டனையைச் சேர்க்கிறார். தேவனுடைய பரிசுத்த கட்டளைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தின் பெரிதான வலியுறுத்தல் மூலம் ஈர்க்கப்பட்டிருக்காமல் ஒருவன் உபாகமத்தை வாசிக்க முடியாது (காண்க உபா. 4:2; 28:1, 9, 14-46).

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் அடிப்படை உள்ளடக்கம், கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதங்களையும் கீழ்ப்படியாதவர்கள் மீதான சாபங்களையும் பற்றி பேசிய போது தெளிவாக வெளிப்படுத்தின (உபா. 28:15-46). நியாயப்பிரமாணம் கனிவான போக்கை ஊக்குவிக்கவில்லை, ஆனால் நீதியை ஊக்குவிக்கிறது. உதாரணமாக, "கண்ணுக்குக் கண்" என்பது குறிப்பிடப்பட்டது, மாறாக "ஒரு கண்ணுக்கு இரண்டு கண்கள்" என்பது சமகால நாகரிகங்களின் சில சட்ட தொகுப்பால் தேவைப்பட்டது (காண்க லேவி. 24:19, 20).[2]

இரண்டு வகையான பாவங்கள் 2 ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவனின் கட்டளை குறிப்பாக விலக்கிய ஒரு செயலை அலட்சியம் செய்தபோது **அக்கிரமம்,** அல்லது "அப்பால் செல்வது," ஏற்பட்டது. உதாரணமாக, "கொலை செய்யாதிருப்பாயாக" என்று நியாயப்பிரமாணம் கூறியது (யாத். 20:13); அந்த விதி ஒருவனால் மீறப்பட்டால், அவன் அக்கிரமக்காரனாக எண்ணப்பட்டான்.

***கீழ்ப்படியாமை*** என்ற வார்த்தைக்கான சரியான அர்த்தம் "கேளாமை" அல்லது கவனகுறைவாக அல்லது அலட்சியத்துடன் கேட்பதாகும். இது கட்டளையிடப்பட்ட ஒரு காரியத்தை செய்யாமல் இருப்பதையும் குறிக்கிறது. இவ்வாறு, ஒருவர் ஓய்வு நாளை ஆசாரிக்கவில்லை என்றால் (யாத். 20:8) அவர் "கீழ்படியவில்லை" என்றே ஆகும்.

"தவிர்ப்பது" மற்றும் "ஒப்புக்கொடாமை" போன்ற காரியங்களையே

பாவமாக கருதுகிறோம். இவை வேதத்தில் குறிப்பாக கூறப்படவில்லை என்றாலும், அவ்வாறாகவே உள்ளது. இவ்விரு வகையான பாவங்களுக்காகவும் மன்னிப்பு கேட்டு ஜெபிப்பதில் தவறேதும் இல்லை. அநேகர் தங்கள் மீறுதல்களுக்காக தண்டிக்கப்படவில்லை, மாறாக, நன்மை செய்ய முடிந்தும் அதை செய்யாமற்போனால் அதுவே பாவமாய் இருக்கும் (யாக். 4:17).

பழைய ஏற்பாட்டில், **எவ்வாறு தண்டிக்கப்பட வேண்டும்** என்பது விளக்கப்பட்டுள்ளது. பொய் சாட்சி சொல்லி ஒருவனை தண்டிக்க நினைத்தவனுக்கு அவ்வாறே செய்யப்பட வேண்டும் (உபா. 19:16-20). இத்தகைய தண்டனை நிச்சயமாக "சரி." பேராசை கொண்ட ஆகான் கல்லெறியுண்டான் (யோசுவா 7:24, 25). ஒரு வேசி கல்லெறியப்பட வேண்டும் (உபா. 22:21). புதிய ஏற்பாட்டில் தண்டனை சிறிது இலகுவாக இருக்கும் என்று எண்ணினால், அனானியா மற்றும் சப்பீராளை கவனத்தில் கொள்ளுங்கள் (அப். 5:1-11). பழைய ஏற்பாட்டில் பொருளாசையினால் இறக்கிற ஒரு மனிதனின் உதாரணம் இங்கு இருக்கிறது (யோசுவா 7), மற்றும் இதே காரணத்திற்காக மக்கள் இறந்திருப்பதற்கு புதிய ஏற்பாட்டிலும் உதாரணம் இருக்கிறது (அப். 5).

நம் தேவன் நம் செய்கைக்கு தக்கதாக பதிலளிக்கிறவர் (2 தீமோ. 4:14; வெளி. 20:13 காண்க). அவர் நிச்சயமாக பட்சபாதமுள்ளவர் அல்ல (அப். 10:34). மோசேக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகள் கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழாகவே உள்ளது, எனினும், ஒருவன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவில்லை என்றால் அவன் நிச்சயமாகவும் கட்டாயமாகவும் தண்டிக்கப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் செய்த ஒப்பீடு, நமக்கு புதிய உடன்படிக்கையில் குறைவான தண்டிப்பு என்று இல்லை என்பதை காட்டுகிறது. எபிரெய நிருபம் எழுதப்பட்ட காலத்தில் மததலைவர்கள் மத்தியில் இத்தகைய கோட்பாடுகள் இருந்தது; இது இலத்தின் மொழியில் *எமினோரி அடமாய்ஸ்*[3] என்றும் எபிரெய மொழியில் *கிளவ்ச்சோமேற்* என்றும் கூறப்பட்டது. இதற்கு "லேசானகனம்" என்று அர்த்தம். இத்தகைய கோட்பாடுகள் "இன்னும் எவ்வளவு" கொள்ளகை என்றும் அழைக்கப்படும். கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஹில்லெல் என்ற ரபி இந்த கோட்பாட்டை கட்டளைகளின் விளக்கத்திற்கான[4] சட்டங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

புதிய உடன்படிக்கையில் தன் பாவங்களுக்கு குறைவான தண்டனை கிடைக்கும் என்று நினைப்பது தவறு. தேவன், தனது மிகுந்த கிருபையினால் நம் பாவங்களை தண்டிக்காமல் விட்டுவிடுவார் என்று நினைப்பது முற்றிலும் தவறு. நிச்சயமாக அவர் கிருபை அளவற்றது தான், நாம் நினைப்பதற்கும் மேலாக உள்ளது, ஆனால், நமது பாவம் தண்டிக்கப்படாது என்றும், தேவகிருபை நம் மீறுதலையும் மறைத்துவிடும் என்றும் கூறுவது தவறு. கீழ்ப்படிதல் மிக அவசியம்.

ஆகவே எபிரெய புத்தகத்தில், தேவகிருபையானது, நாம் முழுமையாக இரட்சிக்கப்படாவிட்டாலும் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் என்ற தவறான எண்ணத்திற்கு தடைபோடுகிறது. கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை ஒன்றிற்கும் மேற்பட்ட தடவைகள் எபிரெயர் கூறி இருக்கிறது (காண்க 10:26-29; 12:25).

தேவன் குறிப்பிட்ட சமய நம்பிக்கை கொண்டிருப்போரின் தனிக் குழுவைச் சார்ந்தவர்களின் பிழைகளை கடந்து செல்லுவார், ஏனென்றால் அவர் நமது விவேகமற்ற தவறுகளை மன்னிக்கிறார் என்று நமக்கு எங்கும் சொல்லப்படவில்லை. நம் அனைவருக்கும், பாவத்திற்காக வருந்தும் இதயமே தேவைப்படுகிறது. இயேசுவின் இரத்தத்தினாலேயே நம்முடைய ஆத்துமாக்களை தொடர்ச்சியாக சுத்திகரிப்பதற்கு (1 யோவான் 1:7-10), தேவனுடைய சித்தத்தை நாம் புரிந்துகொள்ளும்போது, நாம் அதற்கு கீழ்ப்படிய ஆர்வமாக இருக்க வேண்டும். நாம் "இயேசுவின் அற்புதமான கிருபையை" நினைத்தால், நம் பாவமானது குறைவாக விரும்பத்தகாததாயும், மற்றும் நரக ஆக்கினைக்கு தகுதியற்றவர்களாயும் ஆக்குகிறது, நாம் அதை "மலிவான கிருபையாக" மாற்றியிருக்கிறோம், மற்றும் அது நம்மை யூகிக்கும் பாவிகளாக ஆக்குகிறது. "கூடாரத்தில்" உள்ள பாவமானது, தேவனுடைய சபையின் மூலம் அவரது ஊழியத்தைச் செய்வதற்கு மிகப்பெரிய தங்குதடையாக உள்ளது.

**வசனம் 3. இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்?** இந்த கேள்வி நாம் எதிலிருந்து தப்பித்துக் கொள்வோம்? என்ற வேறொரு கேள்வியை ஊக்குவிக்கிறது. நித்திய மரணம் என்பது சரியான விளக்கமாக இருக்க வேண்டும்; இல்லையெனில் இந்த பத்தியின் வீரியத்தை பலவீனப்படுத்துவதாய் இருக்கிறது என்று சொல்லலாம். பேதுரு கிறிஸ்தவர்களுக்கு "அவருடைய அழைப்பைக்குறித்து உறுதியாக்கும்படி" அறிவுறுத்தினான் (2 பேதுரு 1:10). கிறிஸ்துவின் அழைப்பானது ஒரு பரிசுத்தவானுக்கு ஏற்கெனவே முழுமையாக உறுதி செய்யப்பட்டிருக்கும்போது, ஏன் அவனுக்கு அந்த அழைப்பைப் பற்றி உறுதிசெய்வது தேவைப்படுவதாய் இருக்க வேண்டும்? எட்கார் ஜே. குட்ஸ்பீட் இவ்வாறு கூறியுள்ளார்: "ஆகவேதான், நாம் கேட்ட செய்தியினிடம் மிக நெருங்கிய கவனம் செலுத்த வேண்டும், எப்பொழுதும் நமது பிடியை விட்டுவிடாமல் அதைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்."

கேள்வி எழுப்புவது ஒரு சொல்லாட்சி ஆகும், ஏனென்றால், இந்த சூழலில் பதில் தெளிவானதாய் இருக்கிறது மற்றும் வேறு இடத்தில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. *அங்கே தப்பிக்க முடியாது!* சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு என்ன நடக்கும் என்பதை

இரண்டு தெசலோனிக்கேயர் 1:8-10 நமக்கு அறிவிக்கிறது. கர்த்தர் திரும்பி வரும் போது, "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு அவர் வருவார். அந்நாளிலே அவர் வரும்போது, தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்."

அங்கே ஏன் தப்பிக்க முடியாது? ஏனெனில், அது மிகவும் தாமதமாக இருக்கும் வரையும் அல்லது அவன் மனந்திரும்ப முடியாமல், அவன் இதயமானது மிகவும் கல்லானதாய் மாறிவிடும் வரையும், பாவி கீழ்ப்படிதலைப் புறக்கணித்து விடுவான். இரண்டில் ஒரு நிபந்தனை பாவியின் நம்பிக்கையை நீக்கிவிடக்கூடும். மெய்யாகவே, வீட்டெஜமான் எழுந்து, கதவைப்பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத்திறக்க வேண்டுமென்று ஆர்வத்தோடும், தாழ்மையோடும் சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் நுழைவதற்கு மறுப்பு தெரிவிப்பார் என்பது அங்கே முக்கிய விஷயமாய் இருக்கிறது (லூக். 13:24-28).

ஒரு குறைவான குறியீடாக இருந்த பழைய ஏற்பாட்டின் கீழ், பொருந்தக்கூடிய வரம்புகளைக் கடைப்பிடிக்க தவறிய பாவத்திற்குரிய தண்டனையிலிருந்து தப்பிக்க வழி இல்லை என்றால், புதிய உடன்படிக்கையை மீறுவதன் மூலம் பாவம் செய்பவர்களுக்கு, அங்கே தப்பித்துக் கொள்வதற்கான எந்த ஒரு வழியாவது எவ்வாறு இருக்க முடியும்? கிறிஸ்துவின் மூலமே அன்றி, அங்கே இரட்சிப்பிற்கு எந்த வழியும் இல்லை; நாம் அவரை மறுதலித்தால், நமக்கு மீட்பின் நம்பிக்கை இல்லை (பார்க்க 10:26; யோவான் 14:6).

ஒரு நேர்மறையான வழியில், கிறிஸ்துவை நிராகரிக்காமல் அல்லது அலட்சியம் செய்யாமல் இருந்தாலும், மக்கள் இழக்கப்படலாம். நாம் கிறிஸ்துவின் போதனைகளை "புறக்கணித்துவிட்டால்," நரக ஆக்கினை நம் தண்டனையாக இருக்கும். "புறக்கணிப்பு" (ἀμελέω, *அமெலெயோ*) என்ற வார்த்தை சாதாரணமாக "அதைப் பற்றி கவனமில்லாமல்" என்பதாக பொருள்படும். நாம் அதைப் பற்றி கவனமில்லாமல் இருக்கும்போது, எந்தவொரு உலக ஆர்வமும் விருத்தியடைவதில்லை. நமது ஆன்மீக நலன் ஏதாவது வகையில் வித்தியாசமானதாக இருக்க, நாம் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? ஒருவன் ஒரு கொலைகாரன், விபசாரக்காரன் அல்லது குடிகாரன் என்று இருப்பதை தவிர்க்கும்போது, அவனுக்கு தன்னை நியாயப்படுத்தப்படுவதற்கு எந்த அடிப்படை ஆதாரமும் தேவை இல்லை. "நான் ஒரு திருடன் அல்ல என்பதால், என் வியாபாரம் செழிக்கும், மற்றும் ஒரு குறுகிய காலத்தில், நான்

ஐசுரியவானாய் இருப்பேன்" என்று கூறுவது, இத்தகைய பகுத்தறிவில்லாததாய் இருக்கிறது. நமக்கு தொலைவான ஒரு உயரிய இரட்சிப்பு, மற்றும் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்தவர்கள் கண்டிருந்த கனவுகளைவிட நித்திய இளைப்பாறுதலின் உறுதிப்பாடு இருப்பதாலும், நம்மிடம் அதிகமாக எதிர்பார்க்கப்பட வேண்டும்.

இடுக்கமான வாசல் வழியே நுழைய வேண்டிய ஒருவன் கவனமாக மற்றும் தொடர்ந்து வேலை அல்லது முயற்சியுடன் இதைப் பயன்படுத்த வேண்டும் (லூக். 13:23, 24). நம்முடைய "பெரிய இரட்சிப்பானது" முழு உலகையும் விட அதிக மதிப்பு வாய்ந்ததாய் இருக்கிறது. இது பெரியதாய் இருக்கிறது, ஏனெனில் அது பாவம் மற்றும் ஆபத்துக்களில் இருந்து நம்மை காப்பாற்றுகிறது மற்றும் பெரும் வெகுமானத்தை வழங்குகிறது. "எந்த மொழியும் அதை நியாயப்படுத்த போதுமானதாக இல்லை"[5] என்பது மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது. நாம் தேவனின் இரட்சிப்பின் திட்டத்தை புறக்கணித்தால், அங்கே நித்திய நரகத்தின் உண்மையான ஆபத்து இருக்கிறது.

கிறிஸ்தவ சத்தியத்தை அவர்களிடமிருந்து மறைக்க அனுமதிக்கக் கூடாது என்று தனது வாசகர்களை அறிவுறுத்திக்கொண்டு, இந்த நிருபத்தை ஆக்கியோன் தேவனுடைய செய்தியின் பொருளுக்குத் திரும்பினான். 2:3, 4 இல், அவன் அதன் மதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளான்.

**பிறகு, கர்த்தர் மூலமாய் முதலாவது அறிவிக்கப்பட்டதாய் இது இருந்தது.** இந்த செய்தி, கிறிஸ்துவின் தனிப்பட்டதாய் இருக்கிறது. சத்தியத்தின் முழு செய்தியும், முதலாவது யோவான்ஸ்நானனால் பிரசங்கிக்கப்படவில்லை என்றாலும், இயேசுவால் பிரசங்கிக்கப்பட்டது. சபையானது ஆரம்பிக்கப்படவில்லை, மற்றும் யோவான் காலம் முதல் ஆரம்பிக்க முடியவில்லை. யோவானின் மரணத்திற்குப் பிறகு இராஜ்ஜியம் தொடங்கியது, மற்றும் "பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று" இயேசு சொன்னதை, இது விளக்குகிறது (மத். 11:11). யோவானைப் பற்றிய இயேசுவின் இந்த அறிவிப்பு, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு இயேசுவின் சீஷர்கள் ராஜ்யத்தின் ஒரு அங்கமாக இருப்பார்கள், மற்றும் அதினால் யோவானைவிட பெரியவர்களாய் இருப்பார்கள் என்பதை விவரிக்கிறது. யோவானிடம் இருந்த சீஷனை விட இயேசுவின் சீஷன்தான் சிறந்த குணநலன் உடையவனாய் இருந்தான் என்று சொல்லக்கூடியதாய் இது இருக்கவில்லை, ஆனால் ராஜ்யத்திற்குள் உள்ளவர்கள் மட்டுமே அதிக ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறார்கள் என்பதாக உள்ளது. மத்தேயு 11:11-ல் உள்ள அந்த அறிக்கை, யோவானின் தனிப்பட்ட மேன்மையை, யாரும் மேற்கொண்டு விட்டோம் என்று கூறாதபடி, நம்மைத் தடை செய்கிறது.

"கர்த்தர் மூலம்" முதன்முதலில் சொல்லப்பட்ட சுவிசேஷமானது, தேவதூதர்களால் சொல்லப்பட்ட பழைய உடன்படிக்கையைவிட, அதிகம் ஈர்க்கக்கூடியதாய் இருந்தது. "நம்முடைய நியாயப்பிரமாணம் தேவதூதர்களால் கொடுக்கப்பட்டது, மற்றும் இந்த சுவிசேஷம் மனிதரால் பிரசங்கிக்கப்பட்டதாய் இருக்கிறது" என்று யூதமதவாதிகள் கூறிக்கொண்டிருந்திருக்கலாம். எனினும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இயேசு இருக்கிறார்.

ராஜாவாகிய கிறிஸ்து அருகில் இருந்த போது, ராஜ்ஜியம் அருகில் இருந்தது; அவர் தம்முடைய ராஜ்ஜியத்தின் அனைத்து நியமங்களையும் கற்பித்தார், அதனுடைய இயல்புகளை தன்னுடைய தனிப்பட்ட தனித்துவமான மனம் மற்றும் தார்மீக குணங்களின் மூலம் வெளிப்படுத்தினார், மற்றும் அவருடைய சீஷர்களுக்காக தன்னுடைய செய்தியை விட்டுவிட்டுச் சென்றார். அவர்கள் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டபோது, அவர்கள் அதைப் பயன்படுத்துவார்கள், அதை விரிவாக்குவார்கள், மற்றும் ராஜ்யம் வந்தவுடன் அதை தெளிவுபடுத்துவார்கள். கொலோசெயர் 1:13, கொலோசேயிலுள்ள பரிசுத்தவான்கள், பின்னர் ராஜ்யத்திற்கு உட்படுத்தினவர்களாய் இருந்தார்கள் என்று குறிக்கிறது! 7:14ல், இயேசு இங்கே "கர்த்தர்" என்று அடையாளம் காட்டப்பட்டும், மற்றும் அதாவது அவர் தனது ராஜ்யத்தின் மீது ஆட்சி செய்பவர் என்றும் பொருள்படுகிறது (பிதாவாகிய தேவனுடன் இணைந்து என்று எபே. 5:5இல் குறிப்பிடுவதைப்போல).

கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, **பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டது**. சுவிசேஷத்தை உறுதிப்படுத்தும் வல்லமை, அப்போஸ்தலர்களுக்கு (மாற்கு 16:17, 18) இயேசுவினால் வாக்குறுதி அளிக்கப்பட்டது, மற்றும் அவர்கள் அதை முழுமையாகப் பயன்படுத்தினார்கள் (மாற்கு 16:19, 20). "பரிசுத்த ஆவியின் வரங்களினாலே" அருளப்பட்ட அற்புத வல்லமையினால் இது செய்யப்பட்டது.[6] கிறிஸ்துவாலும், மற்றும் அப்போஸ்தலர்களாலும் பிரசங்கிக்கப்பட்ட புதிய செய்தியின் சத்தியத்தை உறுதி செய்ய, அவர்களுக்கு தெய்வீகமான வல்லமைகள் தேவைப்படுவதாய் இருந்தது. எபிரெய நிருபத்தை ஆக்கியோன், கர்த்தரால் சொல்லப்பட்ட இந்த செய்தியானது பரிசுத்த ஆவியின் அற்புதமான வரங்கள் மூலமாக, தேவனால் கண்கூடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தினான். புதிய வெளிப்பாடு, தெய்வீக வல்லமையை விளக்குவதை உறுதிப்படுத்த அத்தியாவசியமானதாய் இருந்தது. உதாரணமாக, யோவான் சந்தேகப்பட்ட தோமாவிடம், உயிர்த்தெழுந்த கர்த்தரின் காட்சியைப் பற்றி சொல்லியபோது, தனது சுவிசேஷ அனுபவத்தின் ஒரு அறிக்கையின் உச்சக்கட்டத்தை எட்டினான். அந்த ஞாயிற்றுக்கிழமையில், தோமா இயேசுவைக் கண்டபோது, "என்

ஆண்டவரே! என் தேவனே!” என்று குற்றத்தை ஒத்துக்கொண்டான் (யோவான் 20:28). பின்னர் யோவான் கூறிய ஆய்வறிக்கை பின்வருமாறு:

> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:30, 31).

வேதவாக்கியங்களை அவர்கள் வாசித்தும், விசுவாசித்தும், மற்றும் கீழ்ப்படிவதால், முழுமையான இரட்சிப்பு விசுவாசத்தின் மூலம் கிடைக்கப் பெறுகிறது. ஆகையால், நமக்கு விசுவாசிக்கப்படவும், மற்றும் இரட்சிக்கப்படவும் நவீன அற்புதங்கள் தேவையில்லை. தேவையற்றவைகளை தேவன் ஏன் செய்ய வேண்டும்?

உயிர்த்தெழுதல் பற்றிய பண்டைய மற்றும் நவீன சந்தேகங்களின் அனைத்து மறுப்புகளும், நம்முடைய கர்த்தருடைய மரணத்திற்கு பிறகு, எருசலேமில் வெறும் ஐம்பது நாட்களுக்கு அவருடைய தனிப்பட்ட உயிர்த்தெழுதலை பார்த்த ஆயிரம் பேர் நம்பின உண்மையை மாற்ற முடியாது. அவருடைய உயிர்த்தெழுதலில் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்றால், எருசலேமில் சபை தொடங்கி இருக்க முடியாது. இது, புதிய ஏற்பாடு கவனம் செலுத்துகின்ற பெரிய அற்புதமாக இருக்கிறது. இந்த வார்த்தையை உறுதிப்படுத்த, பல்வேறு ஆன்மீக வல்லமைகளின் நோக்கத்தை (“வரங்கள்”) எபிரெயர் 2:4 மேலும் உறுதிப்படுத்துகிறது. அது நிறைவேறின பின்பு, வேதத்திலுள்ள வல்லமைகளை வெளிப்படுத்தும் வார்த்தைகளைக் கொண்டுள்ள பிற்கால தலைமுறைகளுக்கு, அத்தகைய வல்லமைகள் தேவையற்றதாக மாறின.

**வசனம் 4.** உறுதிப்படுத்தப்பட்ட ஒரு செய்தி, எப்போதும் தொடர்ச்சியான அற்புதங்களால் மேலும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. ஒருமுறை அமெரிக்க உச்ச நீதிமன்றம் கொடுக்கப்பட்ட வகையிலான வழக்கில் முன்னோடியாக அமைகிறது, பின்னர் நியாயத்தீர்ப்பு சங்கிலிக்கான அஸ்திவாரமாக விளங்கும் அடிப்படை உண்மை ஒரு நீண்ட காலமாக இருப்பதால், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாயும் மற்றும் அது அதற்கு கீழ் உள்ள எந்த ஒரு நீதிமன்றத்திற்கும் பொருந்தும். அதேவிதமான ஒரு வழியில், தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாடு, எல்லா நேரங்களிலும் ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்டது.

அதிசயமான அடையாளங்கள் அப்போஸ்தலனுக்குரிய ஆதாரமாக இருந்தன (2 கொரி. 12:12) மற்றும் அந்த ஆதாரம் தேவைப்படும் வரை

தொடர்ந்தது. **அடையாளங்கள்**, மற்றும் **அதிசயங்கள்**, ஒரே விஷயத்தின் வித்தியாசமான பார்வைகளாயிருந்தது. ஒரு “அடையாளம்” என்பது, தேவனைப் பற்றியும், மற்றும் பார்வையாளருக்கான தூதரைப் பற்றிய ஒரு செய்தியை தெரிவிப்பதற்கான அற்புதமான சம்பவம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. இந்த அடையாளங்கள் “அதிசயங்கள்” என்று அழைக்கப்பட்டன, ஏனென்றால் பார்வையாளர்களின் மனதில் அவைகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன. அற்புதங்கள் நிகழவில்லை என்று யாரும் நியாயமாக விவாதிக்க முடியாது; இந்த செயல்கள் பிசாசின் வல்லமையால் செய்யப்பட்டன என்று கூறுவதன் மூலம் மட்டுமே அவர்களால் எதிர்க்க முடியும் (மத். 12:22-28).

**அற்புதங்கள்** மற்றும் வெளிப்பாடு ஒன்றாக சென்றன, ஏனென்றால் புதிய வெளிப்பாட்டிற்கு புதிய உறுதிப்படுத்தல் தேவைப்படுகிறது. தேவன் புதிய வெளிப்பாடு கொடுத்த போது, அவர் தேவ ஒப்புதலைக் காண்பிக்க, அதிகாரங்களுடன் செய்தி அறிவிப்பாளருக்கு அதை வழங்கினார். இஸ்ரவேலரிடமும், மற்றும் எகிப்தின் பார்வோனிடமும் மோசே அனுப்பப்பட்டபோது “அற்புதங்களைச்” செய்தான் (யாத். 4:1-9, 29, 30). எலிசா சீரிய ராஜாவின் ஒரு படைத்தலைவனும் ராஜாவின் இரண்டாவது ஸ்தானத்தில் உள்ள நாகமானை சுகப்படுத்தியும், மற்றும் அவன் தேவனுடைய வல்லமையை நம்பும்படியும் செய்தான் (2 இராஜா. 5).

புதிய புனித நூல்களும், மற்றும் அற்புதங்களும் ஒன்று சேர்ந்து போகின்றன என்று அதை மேலாக வலியுறுத்த முடியாது. “உங்கள் புதிய புனித நூல்கள் எங்கே?” என்று கேட்பதன் மூலம், அற்புதங்களைச் செய்வதற்கான வல்லமையைக் கொண்டிருப்பவர் களுக்கு, ஒருவன் அறைகூவல் விடுக்கலாம்.[7] அதேபோல், “புதிய புனித நூல்கள்” எழுதுபவர்களை, ஒருவன் அறைகூவல் விடுக்கலாம், “இயேசுவையும், மற்றும் அப்போஸ்தலர்களையும் ஒப்பிட்டு, அத்தகைய உங்களுடைய அற்புதங்கள் எங்கே? என்றும், உதாரணமாக, யாரை நீங்கள் மரித்தவர்களிடமிருந்து எழுப்பினீர்கள்?” என்று கேட்டுக் கொண்டும் ஒருவன் அறைகூவல் விடுக்கலாம்.

கிறிஸ்துவின் செய்தியானது, உண்மையான அற்புதங்களால் உறுதிப்படுத்தப்பட்டது (காண்க: யோவான் 20:30; மாற்கு 2:10-12). மாற்கு 2-ல் உள்ள அற்புதமானது, பாவங்களை மன்னிக்க கிறிஸ்துவின் வல்லமையையும், மற்றும் அதிகாரத்தையும் செயல் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அவர் ஒரு முடமான மனிதனைக் குணப்படுத்த முடிந்தது என்பது, ஒரு தெய்வீகமான செயலாக இருந்தது என்பதால், அவர் தேவனின் இடத்தில் செயல்படுகிறார் என்பதும், மற்றும் பாவங்களையும் மன்னிக்க முடியும் என்பதும் தெளிவாக உள்ளது. சான்றாக அமைந்துள்ள அற்புதமான வல்லமைகளை செயல்படுத்தும் ஒருவன், தேவனுக்கு ஒரு பிரதிநிதியாக ஊழியம்

செய்கிறான்.

எபிரெய நிருபம் எழுதிய கடந்த காலங்களில், அற்புதங்கள் மூலம் தெய்வீக செய்திகளை உறுதிப்படுத்துவது முக்கியமானதாக இருந்தது. இது 2:2-4 வரை உள்ள மூல வாக்கியங்களிலும், மற்றும் பிற இடங்களிலும் நேரடியாக வெளிப்படுத்தப்படாமல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது (பார்க்க மாற்கு 16:20; யோவான் 20:30, 31). மாற்குவின் சுவிசேஷம் எழுதிய காலத்தில், "வசனத்தை உறுதிப்படுத்திய" அடையாளங்கள் (மாற்கு 16:20) நிறைவு செய்யப்பட்டன. இந்த அங்கீகாரங்கள், அல்லது **பரிசுத்த ஆவியின் வரங்கள்**, அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புத வல்லமைகள் தேவனுடைய வார்த்தையை போதுமான அளவிற்கு உறுதிப்படுத்தப்படும் வரைக்கும் நீடித்திருக்க வேண்டும் (1 கொரி. 13:8-10; எபே. 4:8-13). தேவனுடைய உறுதிப்படுத்தப்பட்ட சித்தமானது, தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் வழங்கக்கூடியதாய் இருக்க முடியும், மற்றும் "வரங்களுக்கான"அவசியத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. பவுல் சபையின் பிரதான தேவையான, அதாவது எந்த ஒரு அற்புத வல்லமையை விட, இப்போதுள்ள (மற்றும் முதலாம் நூற்றாண்டில் உள்ளவர்களுக்கும்) நமக்கு மிகவும் முக்கியமானதுமான அன்பினை சுட்டிக்காட்டினான். எனினும், எபிரெய நிருபத்தின் வாசகர்களுக்கு இயேசுவின் அற்புதங்கள் நன்கு தெரிந்திருந்தது. அவர்களுக்கு தொடர்ந்து உறுதிப்படுத்துதல் தேவை இல்லாத போதிலும், இந்த நிருபம் வழங்கிய கூடுதல் போதனை அவர்களுக்கு தேவைப்பட்டது.

இஸ்ரவேலர் கானானுக்குள் நுழைந்தபோது, பரலோகத்திலிருந்து வந்த மன்னா நிறுத்தப்பட்டு விட்டதால், வார்த்தையின் மூலம் தேவைப்படும் வரங்களும், மற்றும் முதிர்ச்சியும் இல்லாமல், சபையானது "குழந்தை பருவத்திலேயே" விட்டுவிடப்பட்ட போது, அற்புதங்களும் நிறுத்தப்பட்டு விட்டன. தேவன் தொடர்ந்து தம்முடைய மக்களுக்கு அற்புதங்களைச் செய்தபோது, அங்கு ஒருபோதும் - அல்லது அங்கு நீண்ட காலமாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை. இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று குறிப்பிடுவதன் மூலம் இயேசு இதை சுட்டிக்காட்டினார் (லூக். 4:27).

"வரங்கள்" (μερισμός, *மெரிஸ்மோஸ்*) என்பது "விநியோகிப்புகள்" அல்லது "பகிர்மானம்" என்று பொருள்படும். இந்த வார்த்தை, ரோமர் 1:11-ல் பவுல் பயன்படுத்திய "ஆவிக்குரிய வரம்" (χάρισμα, *கரிஸ்மா*) என்ற ஒன்றைப்போல, இந்த வார்த்தை ஒரேமாதிரியாக இல்லை. அந்த வார்த்தையும் பன்மை வடிவத்தில், *கரிஸ்மட்டா* (காண்க ரோமர் 12:6; 1 கொரி. 1:7; 12:4, 9, 28, 30) என்பதாகும். எபிரெயர் 2:4-ல்

உள்ள பட்டியலிடப்பட்ட ஒவ்வொன்றும், செய்தியின் தேவனுடைய உறுதிப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. *மெரிஸ்மோஸ்* என்ற பதமானது உண்மையில், வேறு இடங்களில் "ஆன்மீக வரங்கள்" என பயன்படுத்தப்பட்ட *கரிஸ்மா* என்ற வார்த்தையைப் போன்ற ஒரு வார்த்தை அல்ல; ஆனால் ஒரு பதத்தை மற்றொன்றினுள் உள்ளடக்க முடியாது என்பதைக் கடைபிடிக்க வேண்டிய அவசியம் அதற்கு இல்லை.

அற்புதங்கள், அப்போஸ்தல அதிகாரத்திற்கு ஒரு அச்சமூட்டுகிற மரியாதையை உருவாக்கியது (அப். 2:43). அப்போஸ்தலர் 6:6-8-ஐ தொடர்ந்து, அப்போஸ்தலர்கள் தனிப்பட்ட விதமாக சென்ற இடமெங்கும், அத்தகைய வல்லமைகள் அளிக்கப்பட்டது (அப். 8:14-17; 19:1-6; ரோமர் 1:11; 1 கொரி. 12:8-10). அப்போஸ்தலர்கள் தனிப்பட்ட விதமாக எங்கு செல்ல முடியவில்லையோ, அல்லது செல்லவில்லையோ, அங்கே அத்தகைய அற்புதங்களைச் செய்வதற்கான வல்லமையோ, அல்லது அதிகாரமோ யாரும் கொண்டிருக்கவில்லை! இயேசுவும், மற்றும் அப்போஸ்தலர்களும் மரித்தோரை எழுப்பினார்கள் (அப். 9:36-43); இன்று வாழும் எந்தவொரு நபரும் அதைச் செய்ய முடியாது. நாம் எப்பொழுதும் பொய்யான அற்புதம் செய்யும் ஊழியர்களையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம், தேவன் அற்புதமான வல்லமைகளின் "ஏமாற்றும் செல்வாக்கினால்," நம்பாதவர்களை அனுமதிக்கிறார் அல்லது சத்தியத்தை நேசித்து இழுக்கப்பட வேண்டும் (2 தெச. 2:9-11; காண்க மத். 7:21-23).

### கிறிஸ்துவின் உயிர்ப்பலியும் மற்றும் தீவிர மகிழ்ச்சியின் உணர்வும் (2:5-18)

தேவதூதர்களை விடச் சற்றுச் சிறியவனாக்கப்பட்ட கிறிஸ்துவும்,
மற்றும் மரணத்தை ருசி பார்த்தலும் (2:5-8)

**5இனிவரும் உலகத்தைக்குறித்துப் பேசுகிறோமே, அதை அவர்**
**தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை. 6ஒரு இடத்திலே ஒருவன்**
**சாட்சியாக: மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷனுடைய**
**குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? 7அவனை**
**தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும்**
**கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின்**
**கிரியைகளின் மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும்**
**அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான்.**
**8சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில்,**

**அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருளொன்றுமில்லை; அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்.**

**வசனம் 5.** தீவிர மகிழ்ச்சியின் உணர்விற்கு பிறகு, 2:1-4-ல் ஆக்கியோன் தேவதூதர்கள்மீது இயேசுவின் மேன்மையைப் பற்றிய அவனுடைய வாதத்திற்கு திரும்பியுள்ளான்.

**இனிவரும் உலகம் என்பது**, இப்போது நாம் வாழ்கிற மேசியாவின் காலமாய் இருக்கிறது (பார்க்க 6:5). அது, இயேசு பரலோகத்தில் ராஜாவாக முடிசூட்டப்படுவதுடன் ஆரம்பித்ததாயும், மற்றும் அப்போஸ்தலர் 2-ல் ஆவியானவர் அந்த இராஜ்யத்தை ஆளுகை செய்யும்போது, பூமியில் தெளிவாக மாறியுள்ளது. அநேகர் என்ன நினைத்தாலும், இயேசு இந்த காலத்தின் மீது ஆட்சியாளராக இருக்கிறார் (மத். 28:18). நாமும் இந்த காலத்தில், அப்போஸ்தலர்களாக, இயேசுவின் ஊழியர்களாக, தேவனுடைய மக்களை ஆளுகை செய்கிறோம். அவர்கள் எவ்வாறு தங்கள் ஆட்சியை அடைந்தார்கள்? அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டபடியே, அவர்கள் எழுதிய நிருபங்களினால் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது (மத். 19:28).

எபிரெய நிருபத்தின் போதனையைப் பொறுத்த மட்டில் “இனிவரும் உலகம்” என்ற சொல்திறத்தை, இக்காலத்திற்கு பயன்படுத்தவும், அதைத்தொடர்ந்து இயேசுவின் இரண்டாவது வருகையானது, சொற்றொடரை அர்த்தமற்றதாக மாற்றுகிறது. இதை ஆக்கியோன், இப்போது இயேசுவின் மேன்மையைக் காட்டியுள்ளான், அது வருங்காலத்திற்கான ஆயிரம் வருஷ ஆட்சியில் அல்ல.

**நாம் பேசிக்கொண்டிருக்கும் சொற்றொடரைப் பொறுத்த மட்டில்**, என்பது எபிரெயருக்கு எழுதிய நிருபம் முதலில் பிரசங்கத்தின் வடிவத்தில் பேசப்பட்டது என்பதற்கான அடையாளமாக இருக்கலாம். எபிரெய நிருபத்தை கவனமாக வாசிக்கும் ஏறக்குறைய எந்த ஒரு வாசகரும், முதன்முதலாக ஒரு பிரசங்கமாக முன்வைக்கப்பட்டுள்ளதை கண்டுபிடிப்பது சாத்தியமாக இருக்கிறது.

**வசனம் 6. ஒரு நபர் எங்கேயோ சாட்சியமளித்து விட்டார் என்பது**, சங்கீதம் 8:4-6-ன் அசலான ஆசிரியர் அறியப்படவில்லை என்றோ, அல்லது ஆதாரமானது தெய்வீக உத்வேகம் இல்லாமல், சாதாரண ஒரு மனித எழுத்தாளராக இருந்துள்ளார் என்றோ பொருள்படுவது இல்லை. மாறாக, எல்லாவற்றிற்கும் மேலாக செய்தியானது, முக்கியமானதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. எபிரேயர் 4:4-ல் இதேபோன்ற ஒரு சொல்திறம் பயன்படுத்தப்பட்டுள்ளது: “ஏழாம் நாளைக்குறித்து எங்கேயோ ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்.” ஆசிரியர் பத்தியின் ஆதாரத்தை அறிந்திருந்தார் என்பது தெளிவாகிறது. ஃபிலோ ஒரு மூல வாக்கியத்தின் ஆசிரியரை நிச்சயமாக அறிந்திருந்த போதிலும், இம்மாதிரியான வார்த்தைகளையும் கூட அவன் பயண்படுத்தியுள்ளான்.

தேவன் ஆதாரமாக இருக்கும்போது, ஒருவன் மனித ஆசிரியரை அடையாளம் காண வேண்டிய அவசியமில்லை.

சங்கீதம் 8:4-ல் இருந்து, **மனுஷகுமாரன்**, மற்றும் எல்லா நிலையற்ற மனிதர்களுக்கும் பாவம் ஒரு மேற்கோளாக குறிப்பிடப்பட்டு, சங்கீதத்தில் வெளிப்படையாக காட்டப்பட்டுள்ளது. சிலருக்கு, அது இயேசுவின் விருப்பத்துக்குகந்த வெளிப்பாடாக, அவருக்காக சங்கீதக்காரனால் தீர்க்கதரிசனமாக பொருள்படும்படியாக உள்ளது, ஆனால் அதன் இணைத்தன்மை உடைய எபிரெய கவிதையானது, அந்த சொற்றொடர் “மனிதகுலத்தினை” மட்டுமே நிலைநிறுத்துவதாகக் கோருகிறது. ப்ரூஸ் இவ்வாறு எழுதினார்: “இயேசு மனிதகுமாரனாக தன்னைப் பற்றி எப்போதும் பேசியதிலிருந்து, இந்த வெளிப்பாடு கிறிஸ்தவர்களுக்காக அதனுடைய சொல்லிலக்கணத்தின் சக்திக்கு அப்பால் ஒரு தாத்பரியமாகவும், மற்றும் இந்த தாத்பரியம் எபிரெய நிருபத்தை ஆக்கியோனுக்காகவும் இருந்தது என்பது உண்மையாக உள்ளது.”[9]

வேறுவிதமாகக் கூறினால், “மனுஷகுமாரன்” என்ற வார்த்தையின் வெளிப்பாடு “மனுஷன்” என பொருள்படுகிறது, ஆனால் அதுவும்கூட கிறிஸ்துவின் எதிர் வகையில் ஒரு வகையாக இருந்தது.[10] ஏனெனில் “மனுஷ குமாரன்” என்பது இயேசுவுக்கு வேறு இடங்களில் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது (தானி. 7:13 இல் உதாரணமாகவும், மற்றும் எண்பது முறைக்கும் அதிகமாக புதிய ஏற்பாட்டிலும்), இந்த பத்தியானது, முதலில் மனிதனுக்கும், மற்றும் இரண்டாவது கிறிஸ்துவிற்கும், மற்றும் அவருடைய ஆட்சிக்கும் பயன்படுத்துவதான இரட்டை அர்த்தம் கொண்ட ஒன்றாக இருந்தது என்பதற்கான தீர்வு, காண்பவரின் பார்வையை ஆதாரப்பட்டிருக்கலாம். “மனுஷகுமாரன்” என்பது மனிதகுலத்தை மட்டுமே குறிப்பதாய் இருந்தால், பின்னர், தேவன் அத்தகைய தாழ்வில் உள்ள மனிதன்மீது கரிசனை உள்ளவராயும், மற்றும் அவன்மீது அதிக ஆர்வம் காட்டியுள்ளார் என்பது சங்கீதக்காரனின் திகைப்பாய் இருந்தது.[11]

9-ம் வசனத்தில், சாதாரண மனிதனுக்கும் மற்றும் மரணம் உட்பட எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் வைத்திருந்த கிறிஸ்துவுக்கும் இடையே ஒரு வேறுபாடு உள்ளது (8-ம் வசனத்தில் குறிப்பிடுவது போலவே, ஒரு விஷயம் இன்னும் மனிதனுக்கு கீழ்ப்படுத்தப்படவில்லை). தேவனுடைய சித்தத்திற்கு அவருடைய கீழ்ப்படிதலின் ஒரு பகுதியாக, இயேசு மனமுவந்து மரணத்தை உள்ளடக்கியுள்ளார். நாம் மரணத்தை சந்திப்பது போல, அவரும் மரிக்க வேண்டியிருந்தது. 7 மற்றும் 9 வசனங்கள், அவர் “சிறியதொரு காலத்திற்கு” என்பது பூமியில் அவருடைய காலத்தைக் குறிப்பிட்டிருக்க வேண்டும், அச்சமயம் தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்தார் என்று கூறுகிறது.

இயேசுவின் கர்த்தத்துவத்தைப் பற்றிய இந்த பார்வை, பிற வேதாகம வசனங்களுக்கு முரண்படாக இருக்கவில்லை, ஆனால் அது நம்மால் பதிலளிக்க முடியாத கேள்விகளை எழுப்புகிறது. உதாரணமாக, தேவதூதர்கள் அவரைக் காப்பாற்றுவார்கள் (மத். 4:5, 6; சங். 91:11, 12-ஐ பார்க்கவும்), ஆனால் அவருடைய கட்டளையின்படியா அல்லது பிதாவிடமிருந்து வந்த ஒரு வேலையாக அவர்கள் அவ்வாறாக செய்தார்களா? கெத்செமனேயில் அவர்கள் அவருக்கு உதவுவதற்காக, நிச்சயமாக அவர் அவர்களை உதவும்படியாக கட்டளையிட்டிருக்கலாம் (லூக். 22:43); ஆனால், நான் தேவதூதர் உதவிக்காக "என் பிதாவை வேண்டிக்கொண்டால்," என்று அவர்சொன்னார் (மத். 26:53). அவருக்கு அவர்களின்மீது அதிகாரம் இருந்திருந்தால், அவர் பிதாவின் மூலமாக செல்லாதபடி, அவரே அவர்களுக்கு நேரடியாக கட்டளையிட்டிருக்க மாட்டாரா?

தேவன் படைத்த மகத்தான பிரபஞ்சத்துடன் தொடர்பிடுகையில், மனிதன் பூமியில் உள்ள நுண்ணிய துகள்கள் மேல் உள்ள ஒரு துாசியாக இருக்கின்றான். "சூரியனின் மூன்றாவது கிரகத்தில்" நம்மை "விஜயம் செய்த" சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகரால் நமக்கு அருளப்பட்ட கிருபையும் மகிமையும் எவ்வளவு அற்புதமானது! நிச்சயமாக, ஒப்பீட்டளவில் சிறிய நம்முடைய கிரகத்திற்கு, அவருடைய வருகை என்பது, வெற்றிகரமான உச்சநிலையாக இருக்கும் முக்கிய விஷயமாக கிறிஸ்துவின் வருகை இருந்தது. நாம் முக்கியமற்றவர்களாய் இருந்த போதும், தேவன் நம்மிடம் "விஜயம் செய்தார்" (வசனம் 6; KJV).

தேவன் மனிதனைப் பற்றி **கவலைப்படுகிறவராய்** இருக்கிறார் என்பது, உண்மையான வார்த்தையாக மிகவும் நன்றாக வழங்குகிறது என்று NASB கூறுகிறது. அவர் வெறுமனே "வந்து போவதைவிட" அதிகமாய் செய்கிறார்.[12] அனாதைகள், மற்றும் விதவைகளை "விசாரிக்கிறதும்" என்பது, அம்மாதிரியான மக்களை நேரில் சென்று பார்ப்பதற்கும் இன்னும் மேலான என்பதாக பொருள்படுகிறது; அதில் அவர்களை "பார்த்துக்கொண்டே" இருப்பது என்பதும் அடங்கும் என்று யாக்கோபு 1:27 கூறுகிறது. "யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: நான் மரணமடையப் போகிறேன்; ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, ['உங்களை விசாரிப்பார்'; KJV] நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப் பண்ணுவார் என்று சொன்னான்" (ஆதி. 50:24). ஒரு "விஜயம்" என்பது, தேவன் அவரது மக்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும் ஒரு சிறப்பு நடவடிக்கையாக இருந்தது; இது இயேசுவின் வருகையால் மனிதகுலத்திற்காகச் செய்யப்படும். "மிகச்சிறு குறிப்பிட்டுச் சொல்ல முடியாத காரணத்திற்காக, தேவன் இயேசுவைச் சந்திப்பார்" என்று சொல்வதற்கு, இது மிக அலங்கோலமானதாக காணப்படுகிறது. ராபர்ட்

மில்லிகன் இவ்வாறு கூறினார்: “இது பொதுவாக மனிதகுலத்தை குறிக்கிறது, மற்றும் சிலர் கூறியதைப் போல, இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட முறையில் கருதப்படவில்லை, [சங். 8] இது தன்னுள் தானேயும், அத்துடன் அப்போஸ்தலரின் வாதத்தின் நோக்கத்திலிருந்தும் தெளிவாக உள்ளது.”[13]

**வசனங்கள் 7, 8. “அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்”** (வசனம் 7). சங்கீதம் 8:5-ல் இது ஒரு மேற்கோளாக இருக்கிறது. “தேவதூதர்கள்” என்ற வார்த்தை, எபிரெய மூல வாக்கியத்தில் “தெய்வங்கள்” (אֱלֹהִים, *எலோஹிம்*) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் இந்த வார்த்தை “தெய்வீக மனிதர்கள்” என்று பொருள்படலாம் செப்துவஜிந்த் “தேவதூதர்கள்” என்ற வார்த்தையை மொழிபெயர்த்ததன் மூலமாக சங்கீதத்தின் சரியான சிந்தனையை அளிக்கிறது என்பதாக இது சுட்டிக்காட்டுவதாகக் காணப்படுகிறது. NASB *எலோஹிம்* என்பதை, சங்கீதம் 8:5ல், “தேவன்” என மொழிபெயர்க்கிறது, ஆனால் KJV “தேவதூதர்கள்” என மொழிபெயர்க்கிறது.

இந்த வாழ்க்கையில், மனிதன் தொடர்ந்து தேவதூதர்களை விடக் குறைவானவனாக இருக்கிறான். இந்த சமயத்தில், NASB அதைக் கொண்டுள்ளதைப்போல, நித்தியத்தின் பார்வையில் “சிறிதொரு காலம்” என கருதப்படலாம். நோக்கத்திற்காக. இயேசுவும் நம்மைப் போலவே “சிறிதொரு காலத்திற்கு” மட்டுமே இருந்தார். இதுதான் முக்கிய விஷயம் என்றால், பின்பு பிந்தின ஆதாம் (கிறிஸ்து) மூலமாக மனிதன், முந்தின ஆதாமினால் இழந்த எதிர்காலத்தில் அவசியம் நிகழும் அவனது நிகழ்வுகள், மற்றும் உலகையும் கட்டுப்பாட்டிற்குள் மீண்டும் கொண்டுவர முடியும் என்று ஆசிரியர் பரிந்துரைத்துள்ளார். ஆதாமின் பாவம் மூலம் இழந்த மரணம் மீதான கட்டுப்பாட்டினை, கிறிஸ்துவில் மட்டுமே மீண்டும் பெற முடியும். இந்த உண்மை அறிக்கையை இவ்வாறாக விளக்குகிறது, **அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்** (வசனம் 8). எல்லாவற்றையும் மனிதகுலத்தின் கீழ் வைக்காதபோது, அவைகள் நிச்சயமாக கிறிஸ்துவின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

“வெறும் மரணத்திற்கும் மேலாக, அங்கே மனிதனுக்குக் கட்டுப்படாதவைகள் பூமியில் ஏராளமானவைகள் இருக்கின்றன” என்று நீங்கள் சொல்லலாம்.[14] மிருகங்கள், வானிலை கூறுகள், மற்றும் பூமியின் மேற்பரப்பு மற்றும் அதன் உள்ளே நடைபெறும் பெரிய அளவிலான செயல்களின் கட்டமைப்பு தொடர்பான தட்டுகள் ஆகியவைகள் மனிதனின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்பதை நினைத்துப் பாருங்கள். ஒரு நாளில் மனிதன், ஒவ்வொரு மிருகத்தையும், அனைத்து வானிலை கூறுகளையும், மற்றும் பூமியின் மேற்பரப்பு மற்றும் அதன் உள்ளே நடைபெறும் பெரிய அளவிலான செயல்களின் கட்டமைப்பு

தொடர்பான தட்டுகளையும்கூட தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தாலும், மரணத்தை கட்டுப்படுத்த முடியும் என்பதில் அவனுக்கு நம்பிக்கை இல்லை! அவன் வாழ்க்கையை ஓரளவிற்கு நீட்டிக்க முடியும், ஆனால் மரணம் அவனுடைய சக்தியின் எல்லைக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது. இந்த உரையின் செய்தியின் பகுதியாக அது உள்ளது.

கிறிஸ்து, நம்முடைய இரட்சிப்பின் ஆசிரியர் (2:9-13)

**9என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். 10ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. 11எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவரால் உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்: 12உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்; 13நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்.**

நமக்கு விசேஷமான ஆர்வம் இருக்க வேண்டும் என்ற உண்மையானது, மனிதனின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளதைவிட அதிகம் இல்லை, ஆனால் இயேசு நமக்கு வெற்றி அளித்திருக்கிறார். “நம் பெரிய மீட்பர் நமக்கு என்ன செய்தார்?” என்று இப்பொழுது நாம் கேட்போமாக.

**வசனம் 9.** அவர் ஒரு சிறப்பு நோக்கத்திற்காக ஒரு குறுகிய காலத்திலேயே **தேவதூதர்களிடம்** தன்னைத் தாழ்த்தினார். NIV மற்றும் KJV, இயேசு “தேவதூதர்களைவிட சற்று சிறியவராக” உருவாக்கப்பட்டு இருந்தார் எனக் கூறுகின்றன. ஜெரால்ட் எஃப். ஹாவ்தோர்ன் கூறுகையில், **சற்றுச்** சிறியவராக்கப்பட்டிருந்த என்பது, கிரேக்க சொற்களின் சிறந்த மொழிபெயர்ப்பாக இப்போது கருதப்படுகிறது என்றார்.[15] இந்த சொற்றொடர் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைப் பொருட்படுத்தாமல், உணர்வு உள்ளது. நியமிக்கப்பட்ட காலப்பகுதியில், இயேசு பூமிக்குரிய வாழ்க்கையை தேவதூதர்களைக் காட்டிலும் சிறியவராக எடுத்துக் கொண்டார். இந்த வழியில், அவர் மேன்மையின் உணர்வுகளை

காட்டினார், ஆகையால் அவர் மரணத்தைத் தாங்கிக் கொள்ளும் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். தேவதூதர்கள் மரிக்க மாட்டார்கள் என்பது உண்மையாய் இருக்கிறது, ஆனால் அவர்களால் வழி தவறிய பாவிகளைக் காப்பாற்றவோ அல்லது மரணத்தின் மேல் மனிதனின் ஆளுமையை மீட்டெடுக்கவோ முடியாது.[16]

இந்த பகுதி, 2:9-13, மீட்பர் துன்பம் அனுபவிக்க வேண்டும் என்பது, தெய்வீக திட்டத்தில் இருந்தது என்று வெளிப்படுத்துகிறது; அவரது வேதனை தற்செயலானது அல்ல. மீட்பின் இந்த செயல்முறையை, ஒரு பெரும் துவக்கமளிக்கும் ஒருவராய் தேவன் இருந்தார் என்பதை இந்த பத்தியும் காட்டுகிறது.[17] பல மக்களை மகிமைக்குள் கொண்டுவருவதே அவரது இறுதி இலக்காக இருந்தது.

மரணத்தின் துன்பம் காரணமாக, இயேசு பூமிக்கு வந்தார். “ஏனெனில்” (KJV இல் “ஆக”) எனவும் (ὑπὲρ, *ஹுப்பர்*), அதாவது “சார்பினுள்” அல்லது ஒரு பதிலீட்டு சுய தியாகத்தைப் போல என்று பொருள்படுகிறது கிறிஸ்து எனக்குப் பதிலாக. என்னுடைய இடத்தில், மரித்தார். அவர் சிலுவையில் என்னுடைய இடத்தை எடுத்துக் கொண்டார்! “அங்கே கிறிஸ்துவில் தேவனுடைய கிருபையினிமித்தம் நான் போகிறேன்” என்று நாம் மெய்யாகவே சொல்லலாம். “தேவனுடைய கிருபையினால்” அவருடைய வருகை, மரணம், மற்றும் பெருமகிழ்ச்சி அனைத்தும் நிறைவேற்றப்பட்டது. “ஒவ்வொரு மனிதனுக்காகவும்,” பரிசுத்தவானுக்காகவும் அல்லது பாவிக்காகவும் மரிப்பதற்கு விருப்பமுள்ளவராக அவர் இருந்தார். அவர் இவ்விதமாகவும்கூட, தம்முடைய சத்துருக்களுக்காகப் பாடுபட்டார் (ரோமர் 5:8-10).

நம்மீது உள்ள தேவனுடைய அன்பின் மூலம், நமக்காக நம்முடைய இரட்சகரின் அவதாரம், மரணம், பிராயச்சித்தம், மற்றும் மத்தியஸ்தம் ஆகியவை உள்ளன (யோவான் 3:16). அவர் பாடுபடுவதற்கு விருப்பம் உள்ளவராய் இருந்தார் ஏனென்றால், அதின்படி கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டும் (5:8, 9), “அவருக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும்” (5:9) இரட்சகராக இருப்பதன் மூலம், இப்போது **இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.** அவர் நம்முடைய மகிமையான மீட்பர், மற்றும் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள். மற்றவர்கள், செல்வந்தர்களாக இருந்தாலும், கிறிஸ்துவின் மூலமாக நாம் பெற்றுக்கொண்ட இந்த செல்வத்தை ஒப்பிடுகையில், அவர்கள் வறுமையில் வாடுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

கிறிஸ்து “தேர்ந்தெடுக்கப்பட்ட” என அழைக்கப்படும் ஒரு குழுவிற்கு மட்டும் அல்ல, **அனைவருக்காகவும்** மரித்தார். கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய இந்த உறுதிமொழி, “வரையறுக்கப்பட்ட

பிராயச்சித்தம்" என்று அழைக்கப்படும் ஒத்த இயல்பை உடைய ஒரு கோட்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.[18] தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் சபிக்கப்பட்டவர்களாயும், மற்றும் நம்பிக்கையற்றவர்களாகவும் இருந்தால், பின்பு குறைந்தபட்சம் தேர்ந்தெடுக்கப்படாத மனிதகுலத்திற்கு, அவருடைய மரணமானது ஒரு வீணான தியாகமாக இருந்திருக்கும். மார்ஷல் கீபில் சொல்வது உண்டு, "தேர்தல் என்பது இதைப் போன்றது: தேவன் உங்களுக்காக வாக்களிக்கிறார், சாத்தான் உங்களை எதிர்த்து வாக்களிக்கிறான், மற்றும் நீங்கள் தீர்மானிப்பதை வாக்களிக்கிறீர்கள்." எளியதாய் இருக்கும் அது, நல்ல உணர்வினை அளிக்கிறது.

அவரது அவமானம் மற்றும் மரணத்தின் காரணமாக, கிறிஸ்து மிக மேன்மை மிகுந்தவராக இருக்கிறார். பவுல் பிலிப்பியரில் சேர்த்துள்ளார், ஒவ்வொரு முழங்காலும் முடங்கும், மற்றும் ஒவ்வொரு நாவும் கிறிஸ்துவே கர்த்தர் என்று அறிக்கை செய்யும் என்பதே அவருடைய மேன்மை வரும் காலமாய் இருக்கும். அரசியல், இராணுவம் அல்லது பொழுதுபோக்கு உலகில் இப்போது வாழ்கின்ற நன்கு அறியப்பட்ட நபர்களை சிந்தியுங்கள்: அவர்கள் அனைவரும் இயேசுவின் முன் வணங்குவார்கள் (பிலி. 2:8-11). எல்லா மக்களும், அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களை பொருட்படுத்தாமல், ஒரே நாளில் அவரை முழுமையாக ஏற்றுக்கொள்வார்கள்! ஏசாயாவின் நாட்களில், இந்த பெரு மகிழ்ச்சியின் நிலையானது, அவரது மரணத்தின் ஒரு விளைவாக இருக்கும் என்று உறுதியளித்ததாக இருந்தது (ஏசாயா 53:12). கிறிஸ்து இப்பொழுது தேவனுடைய வலது பாரிசத்திலே ஆட்சி செய்கிறார், அதாவது அவர் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும் ஆக, முடிசூட்டப்பட்டார் என்று பொருள்படுகிறது (1 தீமோ. 6:15, எபி. 8:1; பார்க்க வெளி. 17:14).

"அவருடைய தெய்வீக வல்லமையால், அவருடைய குமாரனின் மகத்தான பலியைத் தவிர, வேறொரு வழி மூலம் இரட்சிப்பை அடைய தேவனால் ஏன் செய்ய இயலாது?" என்று யாராவது கேட்கலாம். "எனக்கு தனது ஒரே மகனை தீமை நிறைந்த ஒரு உலகிற்கு மரிக்க அனுமதித்த தேவனைப்பற்றி ஒரு உயர்ந்த கருத்து இருக்க முடியாது" என்று கூறும் நபர், தேவனைக் காட்டிலும் தன்னைப் பற்றி இன்னும் அதிகமாக நமக்குச் சொல்கிறான். நம்முடைய அன்பான பிதாவினுடைய ஞானத்தைவிட, தன்னுடைய சுய ஞானம் பெரியதாக இருப்பதாக அவன் நினைக்கிறான்! உலகத்தை இரட்சிக்க வேண்டும் என்று அவன் எப்படி முன்மொழிவான்? மற்றொரு வழி சாத்தியமானால், தேவன் நிச்சயமாக அதைப் பயன்படுத்தியிருப்பார்.

**வசனம் 10.** "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்கள்" (1:14) "குமாரர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். இயேசு "அனைவருக்காக மரணத்தை ருசி பார்க்க" வேண்டியிருந்தது (வசனம் 9), இது

இங்கே "சுதந்தரிக்கப்போகிறவர்களுக்கும்," மற்றும் "குமாரர்களாய்" இருக்கிறவர்களுக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் மனித ரூபம், குறிப்பாக அவருடைய மரணம், அநேக யூதர்களுக்கு இடறலாய் இருந்தது (1 கொரி. 1:23). "கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார்" என்று அவர்கள் அறிந்திருந்தனர் (யோவான் 12:34). எபிரெயர் நிருபத்தை ஆக்கியோன், தங்களுக்காக இயேசுவின் மரணத்தை அனுமதித்த மனிதகுலம், தேவனுடைய திட்டத்தின் பகுதியாக இருந்ததை, இந்த பின்வாங்கிப்போன யூத கிறிஸ்தவர்களுக்கு காட்டும்படி நிர்பந்திக்கப்பட்டான்.

நாம் இரட்சிப்பைப் பெறுவதற்காக, அவர் மரிப்பது **அவருக்கு பொருத்தமாக இருந்தது** (வசனம் 10). வசனம் 10 இந்த ஆய்வுக்கட்டுரையின் பகுதியானது "ஆய்வறிக்கை" என அழைக்கப்படலாம் (2:10-18). **அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்ப்பது**, அவருடைய உபத்திரவத்தில் இயேசுவின் நோக்கமாக இருந்தது. மாற்கு இயேசுவின் உதடுகளிலிருந்து அதே நோக்கத்தை மேற்கோள் காட்டினான்: "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார்" என்றார் (மாற்கு 10:45). இயேசு நம்முடைய பாவங்களை மறைத்தும், மற்றும் தேவனுடைய ஆவணத்தில் இருந்து அவைகளைத் துடைத்தெறியவும்; இந்த வழியில் தேவனுடைய அன்பு செயல் விளக்கமளிக்கப்பட்டது, மற்றும் நாம் செய்ய வேண்டிய எதிர்ச்செயலைத் தெளிவாகக் காண்கிறோம் (1 யோவான் 4:19).

தேவனுடைய மகத்தான அன்பை வெளிக்காட்டுவதற்கு கிறிஸ்துவின் மரணம் சிறந்த வழி என்பதால், "இது அவருக்கு பொருத்தமாக இருந்தது" என்று உறுதி செய்திருக்கிறது. அரிஸ்டாட்டில் "பொருத்தமாக" என்ற இந்த வார்த்தையை, "அது இந்த வழியில் இருக்க வேண்டும்" என்று பொருள்படும் படியாக பயன்படுத்தினார். புரூஸ் இவ்வாறு எழுதினார்: "நாம் தேவனின் புனையப்பட்ட காலியான இதயத்தைப் பார்க்கிறோம் என்பது, நம் கர்த்தரின் உணர்வில் உள்ளது; நாம் அவரை பார்க்கும்போது, 'கிறிஸ்துக்குள் தன்னை உலகிற்கு ஒப்புரவாக்கினார்' என்பதை விட, எங்குமே தேவன் முற்றிலும் முழுமையாக அல்லது முற்றிலும் தேவனைப்போல மதிப்புடன் வெளிப்படுத்தியுள்ளார் [2 கொரி. 5:19]."[19]

**ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர்**, என்பது 1:2, 3ஐ சுட்டிக்காட்டுகிறது, அங்கே இயேசு சர்வத்திற்கும் சுதந்திரவாளியாக அழைக்கப்படுகிறார். தம்முடைய வல்லமையுள்ள வார்த்தையினால் அவர் சர்வத்தையும் தாங்குகிறார். எல்லாம் கிறிஸ்துவின் மூலமாய் ஆயிற்று (யோவான் 1:3; காண்க ரோமர் 11:36). தேவன் மற்றும் கிறிஸ்துவின் மகிமைக்காக சர்வ

சிருஷ்டிப்புகளும் உண்டாக்கப்பட்டுள்ளன.

நம் இரட்சிப்பிற்கு, அவர் **ஆக்கியோனாயும்** (NASB; NIV) மற்றும் "தலைவராயும்" (KJV) இருக்கிறார் (பார்க்க 12:2). இங்கே வார்த்தை, "ஆக்கியோன்" எனவும் (ἀρχηγός, *ஆர்ச்சேகோஸ்* இலிருந்து) "பாதை கண்டுபிடிப்பவர்" அல்லது "முன்னோடியாக"[20] என்று பொருள்படும்படி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தேவனின் "அநேக பிள்ளைகளை" மகிமைக்குள் கொண்டுவர முடிந்த, நம் கிறிஸ்து இரட்சகர் இரட்சிப்பின் வழியைப் பறைசாற்றினார்.[21] ராஜா யாக்கோபுவின் காலத்தில், 1611இல் அங்கீகாரம் பெற்ற (ராஜா யாக்கோபு) விவிலிய உற்பத்தியை நியமித்தவர், "கேப்டன்" என்பவன், இராணுவத்தை யுத்தத்திற்கு வழிநடத்திய ஒருவனாய் இருந்தான். பண்டைய மதச்சார்பற்ற கிரேக்க எழுத்துக்களில், இந்த வார்த்தையானது, ஒரு நகரம் நிறுவிய, அதன் பெயரை வழங்கிய, மற்றும் அதன் பாதுகாவலராக பணியாற்றிய வீரனைக் குறிக்கிறது.[22] நமக்கு மகிமையின் வழியைக் காட்டிய கிறிஸ்து ஒருவருக்கே, இத்தகைய விவரிக்கிற தலைப்பு நிச்சயமாக பொருந்தும்!

நம்மை **பரிபூரணமாக** [கொண்டு] ஆக்குவதன் மூலம், சர்வவல்லமையுள்ள மகிமையுள்ள ஆசனத்தின் அறைக்குள் நாம் நுழைவதற்கு, இப்போதும்கூட அவர் சாத்தியம் செய்திருக்கிறார் (4:15, 16). பின்பு, இயேசு "பரிபூரணராக" எப்படி இருந்தார்? வினை வடிவத்தில், "பரிபூரணம்" (τελειόω, *டெலாய்யோ*) என்பது "ஒரு செயல்முறையை முடிக்க" என்று பொருள்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில், நிறைவு செய்தல் என்பது பாடுகளின் மூலம் நிறைவேற்றப்பட்டது.[23] கிறிஸ்துவின் "பரிபூரணம்" ஆகி என்பது, அவர் முன்னர் ஏதேனும் ஒழுக்கக் குறைபாடுகளுடன் இருந்ததாக கூறப்படவில்லை; மாறாக, அவர் **பாடுகள் மூலம்**, நம்முடைய பிரதான ஆசாரியராய் இருக்க முழுமையான தகுதியுள்ளவரானார் என்று குறிப்பிடுகிறது. எபிரெயரில் பூரணர் என்பது, அடிக்கடி அவருடைய பாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது (பார்க்க 5:8, 9). கிறிஸ்து அவருடைய பாடுகளினால் பரிபூரணராக்கப்பட்டார். அதாவது, அவர் நிறைவேற்றப்பட வேண்டிய பணிக்காக, "போதுமான" அல்லது "முழுமையாக பயனுள்ளதாகச்" செய்தார்.[24] மனித நடையில் கூறினால், நாம் பெற்றிருக்கும் மாம்சத்தின் அனைத்து பலவீனங்களையும் இயேசுவும் கொண்டிருந்தார்; நம்மைப்போல அவரும் வளர வேண்டியிருந்தது (லூக். 2:52 பார்க்கவும்). மனிதனின் பாவங்களுக்காக, தேவனுக்கு பாவநிவிர்த்தி செலுத்துவது பயனுள்ளதாக இருக்க, ஆசாரியன் முழுமையாக மனித தேவைகளையும், மற்றும் பிரச்சனைகளையும் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. நம் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக, இயேசு தன்னையே மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார் என்பதற்காக அவர் இதைச் செய்ததினால், தேவன் நிச்சயமாக பாவங்களை மன்னிக்க முடியும் (ரோமர் 3:23-26).[25]

நீதிக்கான அவரது கோரிக்கையை நிறைவேற்றுவது, தேவனுடைய திட்டத்தின் தெய்வீக திட்டமாக இருந்தது, ஆனால் இயேசுவும்கூட மனிதகுலத்தை நன்கு அறிய வேண்டியிருந்தது (2:17, 18). 10-ம் வசனமானது, இரட்சகரின் பாடுகளைத் தவிர, வேறொன்றும் பூரணமானதாக இருக்க முடியாது என அறிவிக்கிறது, அடுத்த வசனம் அவருடைய அவதாரதத்தைத் தவிர, வேறொன்றினாலும் நமக்கு இரட்சகராக அவர் இருப்பது, சாத்தியமற்றதாக இருந்திருக்கும் என்பதைக் காட்டுகிறது. இப்போது அவர் நம்முடன் முழுமையாக பரிவுணர்வுடன் இருக்கலாம், ஏனென்றால் அவர் பாடுகளில் நம்முடன் முழுமையாக அடையாளம் காட்டப்பட்டுள்ளார்.

**வசனம் 11.** ஒரு ஆசாரியனாக ஊழியம் செய்யும் ஒருவன், மக்களை புரிந்துகொள்ளும் பொருட்டு, அவர்களுக்குள் ஒருவனாக இருக்க வேண்டும். **அனைவருக்கும் ஒரே பிதாவே இருக்கிறார்** என்று NASB யும், "ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கிறார்கள்" என்று NIV யும், மற்றும் "அனைவரும் ஒரே பங்காக இருக்கிறார்கள்" என்று NEB யும் மொழிபெயர்க்கின்றன.[26] நியாயப்பிரமாணத்தின் கீழ், ஒரு சுத்திகரிப்பின் செயல் மூலம் பரிசுத்தமாக்கப்பட்டவர், மக்களுக்காக செயல்பட்டார், மற்றும் அவர்களில் ஒருவராயும் இருந்தார். இந்தப் பத்தியானது, பரிசுத்தப்படுத்துகிறவர் இயேசு என்று சந்தேகமின்றி குறிப்பிட்டுள்ளது. இது ஒரு உண்மையாக இருந்த போதிலும், சத்தியத்தினாலே அப்போஸ்தலர்களைப் பரிசுத்தமாக்கும் என்று அவர் பிதாவிடம் ஜெபம் செய்தார் (யோவான் 17:17). பழைய ஏற்பாட்டின்கீழ், தேவன் தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களை பரிசுத்தப்படுத்தினார் (யாத். 31:13; லேவி. 20:8; 22:32; எசே. 37:28). இங்கே, நாம் அவருடைய இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதால், கிறிஸ்துவின் மீது வலியுறுத்தப்படுகிறது (பார்க்க எபி. 10:29). இயேசு பிதாவின் மீது தன்னுடைய நம்பிக்கையை வைத்திருந்தார் (வசனம் 13).

"பரிசுத்தமாக்குதல்" (ἁγιάζω, *ஹாகியாஜோ*) என்பது, புதிய ஏற்பாட்டில் இரண்டு புலன்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது: "மாசில்லாதபடி, சுத்திகரிக்க அல்லது பரிசுத்தமாக்க" மற்றும் "புனிதமாக்க அல்லது பொதுவான ஒன்றிலிருந்து, புனிதமான ஒரு பயன்பாட்டிற்கு பிரித்தெடுத்தல்" என்பவைகளாகும். வழக்கமான விளக்கமானது, "பிரித்தெடுத்து" என்பதாய் இருக்கிறது, மற்றும் "வித்தியாசமாக இருக்க வேண்டும்" என்ற எளிமையான அடிப்படைப் பொருள்படுகிறது. இந்த வார்த்தையின் (ἅγιος, *ஹாகியோஸ்*) பெயர்ச்சொல் "பரிசுத்த" என்று பொருள்படுகிறது. "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" என்று எபிரெயர் 10:10 குறிப்பிடுகிறது. அவருடைய மரணத்தின் மூலம், நாம் தேவனை வணங்குவதற்கும், மற்றும் சேவிப்பதற்கும்

பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்து அனைவருக்கும் ஒருமுறை. நாம் அவருடைய “பரிசுத்த” ஜனமாய் இருக்கிறபடியால், ஒரு நாளில் அவருடைய மகிமைக்குள் பிரவேசிப்போம்.

“பரிசுத்தமாக்கப்பட” அல்லது “பிரித்தெடுக்கப்பட” வேண்டும் என்பது, எளிமையாக கிறிஸ்துவைப் போலவும், மற்றும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி, அவருடைய மகிமைக்குள் பிரவேசிக்க நம் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். ப்ரூஸ் கூறினார்: “பரிசுத்தமாக்கப்படுதல் மகிமையின் ஆரம்பமாய் இருக்கிறது, மற்றும் மகிமையானது பரிசுத்தமாக்குதலின் பூரணமாய் இருக்கிறது.”[27] சாத்தியமான ஒவ்வொரு வழியிலும், நம் இயல்பின் பங்காளியாக இருக்க வேண்டி, தன்னையே தத்தம் செய்த நம்மைப் போலவே மரணத்தை எதிர் கொண்ட கிறிஸ்துவோடு நாம் ஒன்றுகூடி இருக்க வேண்டும். பரிசுத்தமாக்கப்பட்ட, மற்றும் பரிசுத்தமாக்குபவர் என்பது “பொதுவான ஒரு மனித நேயத்தைப் பகிர்ந்துகொள்கின்றன” என்று பிலிப்ஸின் பத்தியின் சாரத்தை மாற்று வார்த்தைகள் கொண்டு மாற்றி எழுதுதல் கூறுகிறது. இந்த அறிக்கையை விட, சித்தாந்த பார்வையை (அந்த இயேசு மட்டுமே தோற்றமளித்தார் அல்லது மனிதனைப்போல காணப்பட்டார்; வசனம் 14இல் கலந்தாய்வினைப் பார்க்கவும்) மறுக்க இதைத்தவிர வேறொன்று சிறந்ததாக இருக்க முடியாது.

பரிசுத்தமாக்குகிறதும் அல்லது “கட்டியெழுப்புகிறதும்,” மற்றும் “பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் சுதந்தரத்தைக்” கொடுக்கிறதுமான வசனத்தை, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் கொடுத்து ஒத்துழைத்திருக்கிறார்கள் (அப். 20:32). வசனம் 11 வில் உள்ள “பரிசுத்தமாக்கப்பட்ட” என்ற வார்த்தையானது ஒரு வினை வடிவத்தில் உள்ளது, இயேசு இந்த வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது.

அவருடைய நெருக்கம், மற்றும் நம்முடன் ஒன்றாய் இருத்தல் ஆகியவற்றால், **கிறிஸ்து சகோதரரே என்று** [நம்மை] **அழைப்பதற்காக வெட்கப்படுவதில்லை**. நாம் சபையின் ஒவ்வொரு அங்கத்தினரிடமும், மற்றும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவுடனும் சகோதரனுமாய் (இதில் “சகோதரிகள்” உள்ளனர்), இருக்கிறோம் (மத். 12:50; ரோமர் 8:29; எபி. 2:17). சபையின் அங்கமாக இருப்பது, நாம் கிறிஸ்துவுடனும்கூட அங்கமாக இருக்கிறோம். கிறிஸ்தவர்களான நாம் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகப் பிரதிநிதித்துவப்படுத்துகையில், இன்றைய உலகில் நாம் அடையாளப்பூர்வமாக கிறிஸ்து ஆக தோன்ற வேண்டும். அவன் தன்னை துன்பப்படுத்தினான் என்று பவுலிடம் கர்த்தர் எப்படிச் சொல்ல முடியும் என்பதை விளக்குவதற்கு இது உதவுகிறது (அப். 9:4). கணவன், மற்றும் மனைவியின் நெருக்கமானது, கிறிஸ்துவும், மற்றும் அவரது சபையினுடைய நெருக்கத்தின் ஒரு வகையாக இருக்கிறது (எபே. 5:22-30). கிறிஸ்துவும், மற்றும் அவருடைய “பிள்ளைகளும்” ஒரேவொரு

குடும்பமாகவும், மற்றும் ஒரு இயல்புடையவர்களாகவும் இருப்பது, தேவனுடைய சித்தமாக இருந்ததால், மரணத்திற்கும் கூட செல்ல வேண்டியது கிறிஸ்துவுக்கு அவசியமாயிருந்தது. எனவே, "சகோதரர் கிறிஸ்து" என்று சொல்வதற்கு புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை பயன்படுத்தப்படுவதற்கான எந்த உதாரணமும் நமக்கு இல்லை என்றாலும், நாம் அவ்வாறாக சரியாகப் பேசலாம். ஒருவன் மிக பரிசுத்தமானவனாகவும், மற்றும் தூய்மையானவனாகவும் இருக்கும்போது, அவனுக்கு நம்மைக் குறித்து வெட்கப்படுவதற்கு அனைத்து உரிமை உண்டு, ஆனால் அவர் அவ்வாறாக இருக்கவில்லை. தன் சகோதரனை நேசிக்கும் ஒருவன், அவனது இயலாமைகள் அல்லது பிரச்சனைகளைப் பற்றி அவன் ஒருபோதும் வெட்கப்படுவதில்லை.

**வசனம் 12.** இந்த வசனம் சங்கீதம் 22:22ல் இருந்து மேற்கோள்களை கொண்டிருக்கிறது, அது கிறிஸ்துவுக்கு அவருடைய சபையினுடனான இந்த ஐக்கியத்தை விளக்குகிறது. எபிரெயர் நிருபம் எழுதப்பட்ட சமயத்தில், சங்கீதம் 22 ஆனது மீட்பாளரைப் பற்றியது என ஒவ்வொரு கிறிஸ்தவனும் - நிச்சயமாக ஒவ்வொரு எபிரெய கிறிஸ்தவனும் - அறிந்திருக்க வேண்டும், ஏனென்றால் இயேசு சிலுவையில் அதிலிருந்து மேற்கோள் காட்டியிருந்தார். சங்கீதம் 22:1 ஆனது, மத்தேயு 27:46-ல், மற்றும் மாற்கு 15:34-ல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. சங்கீதம் 22:1, 8, 15, 16, மற்றும் 18 ஆகியவை, புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. சங்கீதத்திலுள்ள பேச்சாளர், ஆவியானவர், தாவீதின் மூலமாக பேசின கிறிஸ்துவாக இருந்தார் (பார்க்க 1 பேதுரு 1:11). எனினும், சங்கீதத்தில் சில விஷயங்கள் தாவீதிற்கு மட்டுமே பொருந்தும். உதாரணமாக, "நானோ ஒரு புழு, மனுஷனல்ல" (சங். 22:6) என்பது, இயேசுவுக்கு அரிதாக பொருந்த முடியும். அவர்கள் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதை அறிந்திராமல், சிலுவையைச் சுற்றியிருந்தவர்களும், மற்றும் சீண்டியவர்களும் சங்கீதம் 22:8-ல் உள்ள சிந்தனையைப் பற்றி இவ்வாறு சொன்னார்கள்: "உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள்; கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்றார்கள்" (பார்க்க மத். 27:43). வெளிப்படையாக, சங்கீதம் 22:13-18-இன் மொழி நடையானது, தாவீதைக் காட்டிலும் அதிகமாக இயேசுவுக்கு பொருத்தமாயிருந்தது.[28]

தேவனுடைய நாமத்தைப் **பாடியும்** (கொண்டும்), மற்றும் **போற்றியும்** (கொண்டும்) என்பதைப் போல … **சபையின் நடுவில்** கிறிஸ்து சித்தரிக்கப்பட்டுள்ளார். "சபை" என்பது, மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையாய் (ἐκκλησία, *எக்லேசியா*, "சபை") இருக்கிறது. இந்தப் பத்தியில் "எப்போது இயேசு சபையின் நடுவில் பாடினார்?" என்ற கேள்வி எழும்புகிறது (வசனம் 12). ஜெப ஆலயக் கூடங்களில் அவர் அடிக்கடி பாடியிருக்க வேண்டும் என்றாலும்,

அவருடைய பாடலின் ஒரே ஒரு எடுத்துக்காட்டு நமக்கு உள்ளது (மத். 26:30). இங்கு அர்த்தம் என்னவென்றால், இயேசு தம் சகோதரர்களுடன் தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தார் என்பதாகும்! “சபையின் நடுவில்” (KJV) என்ற இந்த அறிக்கையானது, ஒழுங்காக காண்பிக்கப்பட்டது, இது சில உணர்வில், இயேசு இன்று நம்முடன் பாடுகிறார் என்று சுட்டிக்காட்டுகிறது.[29] அவருடைய சகோதரர்கள் நம்முடைய ஆராதனையில் பாடுவதுபோல், நம்மைப்போல இன்னும்கூட அவருடைய ஆவியில் அவர் நம்முடன் போற்றிப் பாடுபடலாம் (மத். 18:20; 28:20).

“சபை” என்பது, அவருடைய சகோதரர்களின் கூட்டத்தைக் குறிக்கிறது, ஆனால் அந்த வார்த்தையும்கூட, முதல் நூற்றாண்டில் பொதுவான ஒரு மதச்சார்பற்ற அர்த்தத்தைக் கொண்டிருந்தது (அப். 19:41 பார்க்கவும்). மத்தேயு 26:30ல், இயேசு தம் அப்போஸ்தலர்களோடு ஒரு சபையில் இருந்தார், ஆனால் அது, அவர் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட சபையாக இருக்கவில்லை (அப். 20:28, ஏ.எஸ்.வி). எனினும், எபிரெயர் நிருபம் எழுதப்பட்ட காலத்தில், *எக்கிலீஸியா* என்ற வார்த்தை, உடனடியாக இயேசு கிறிஸ்துவின் சபையை நினைவூட்டுவதாய் இருந்தது.

அவரது சகோதரர்களுடன் பாடியது, இப்போது ஒரு ஆன்மீக முறையில் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து அவர் பாடுவதை குறிப்பதாக இருக்க வேண்டும். இந்த உண்மை, இப்போது ராஜ்யத்தில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் அவர் நம்முடன் பங்குகொள்வதை ஒப்பிடத்தக்கதாய் இருக்கிறது (மத். 26:29).

**வசனம் 13. நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன்** என்பது, ஏசாயா 8:17ஆ, மற்றும் 2 சாமுவேல் 22:3 ஆகியவற்றின் செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பிலிருந்து ஒரு மேற்கோளாக இருக்கிறது (சங். 18:2 ஐயும் பார்க்க). ஏசாயா 8:17, 18 வசனங்களில், கிறிஸ்துவை “இடறுதலுக்கான ஒரு கன்மலை” என்பதாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருந்தது (ஏசாயா 8:14).[30] இயேசு பூமியிலிருந்தபோது, அவர் முழுமையாக ஏசாயா இருந்ததைப்போல, மானிடரூபம் எடுத்து இருந்தார், ஆகையால் தேவன்மீது நம்பிக்கை வைக்க வேண்டியிருந்தது என்று அது பரிந்துரைக்கலாம். எனினும், மத்தேயு 27:43-ல், “தான் தேவனுடைய குமாரனென்று” இயேசு சொன்னதாகக் கலகக்காரர் கூட்டம் மேற்கோளிட்டபோது, அது இகழ்ச்சியான சொல்லாக பயன்படுத்தப்பட்டது. ஆனாலும், இது சிலுவையில் நம்முடைய கர்த்தருடைய இதயத்தின் உண்மையான வெளிப்பாடாக இருந்தது. மாம்சத்தில் இருந்தபோது, “தேவன் மீது முழுமையான ஆதாரம் கொண்டிருந்து, அந்த வரம்புகளுக்குள்ளேயே வாழ்வது” அவருக்கு அவசியமாய் இருந்தது, மற்றும், அவர் ஏற்பாடு செய்திருந்த தேவனுடைய ஜனங்களின் புதிய சமுதாயமும் அவ்வாறே

செய்யவேண்டியிருந்தது.[31]

தாவீதின் வார்த்தைகளில் சங்கீதம் 16:8-11-ல், இயேசுவிற்கு பிதாவின் மீதுள்ள முழுமையான நம்பிக்கையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர். ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." அப்போஸ்தலர் 2:25-28 இல், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவின் பிரசங்கத்தில், இந்தப் பகுதி மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இயேசு தன்னுடைய ஆவியை பிதாவாகிய தேவனிடம் ஒப்புவித்தது, இந்த நம்பிக்கையை முழுமையாக சிலுவையில் செயல் விளக்கமளித்துள்ளார் (லூக். 23:46). கிறிஸ்து மனிதகுலத்தின் மீது கொண்டுள்ள முக்கியத்துவம் மீண்டும் தெரிய வருகிறது.

ஏசாயா 8:18-ஐ மேற்கோள் காட்டி, **இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்** என்று ஆசிரியர் சொல்லியுள்ளார். இது தீர்க்கதரிசனத்தின் ஒரு இரட்டிப்பான பயன்பாட்டின் மற்றொரு நிகழ்ச்சியைப் போல தோன்றுகிறது, ஏனெனில் அது நிச்சயமாக ஏசாயாவின் பிள்ளைகளுக்கு முதன்முதலாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.[32] தாவீதின் வம்சத்திலுள்ள ஒவ்வொரு ராஜாவும் கிறிஸ்துவின் அதிகாரத்தின் நிலையை பிரதிநிதித்துவம் செய்ததைப் போலவே, ஒவ்வொரு உண்மையான தீர்க்கதரிசியும், கிறிஸ்துவின் அதிகாரத்தின் நிலையின் தீர்க்கதரிசனத்தை பிரதிநிதித்துவம் செய்தார்கள்.

புதிய ஏற்பாட்டில் எபிரெயர் நிருபத்தில், கிறிஸ்துவின் "குமாரர்கள்" அல்லது "பிள்ளைகள்" என்பது விசித்திரமான ஒரு பயன்பாடாக இருக்கிறது. பாடுபடும் ஊழியருக்கு "தலைமுறை" இல்லை (வசனம் 8) என்று ஏசாயா 53 கூறுகிறது, இருந்த போதிலும், தீர்க்கதரிசி சேர்த்துள்ளார், "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்" (வசனம் 10). அவரது மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் ஆகியவைகளிலிருந்து கிறிஸ்து சபையில் அவருடைய சந்ததியைக் கண்டார். "குமாரர்களாக" அல்லது "பிள்ளைகளாக" மாறினவர்கள், கிறிஸ்துவுடன் சேர்ந்து தேவனை நம்ப வேண்டும். கிறிஸ்து தொடர்ந்து அவருடைய பிள்ளைகளுக்காக தேவனிடம் பேசுகிறார். பரலோகத்தில், நம்முடைய மத்தியஸ்தராக

நமக்காக பிதாவிடம் பிரதிநிதித்துவம் செய்கிறார் (எபி. 7:25), மற்றும் பூமியில் நாம் அவருக்காக பிரதிநிதித்துவம் செய்கிறோம்.

பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள், அவற்றின் நிஜ சூழலில் இருந்து, அவைகளை வெளியே எடுத்துவிடாமல், எபிரெயரில் பயன்படுத்தப்பட்டன, ஏனென்றால் அவைகள் வேதாகமத்தின் பெரிய சூழலுடன் முழுமையாக ஒத்திருக்கின்றன. பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்திருந்த எபிரெய கிறிஸ்தவர்களுக்கு எழுதுவதில் திறமை வாய்ந்ததாக எழுத ஆரம்பிக்கிற சமயத்திலும்கூட, அவனுடைய யூத சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளும் விதமாக, எழுத்தாளர் கவனமாக வேதவசனங்களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இந்த மேற்கோள்களில் முதன்மையானது தொடர்பாக ப்ரூஸ் குறிப்பிட்டது, "புதிய ஏற்பாட்டில் உள்ள பிரதான பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் தனிமைப்படுத்தப்படாத சான்று நூல்கள் ஆகும், ஆனால் அவைகளின் சூழல்கள், அவைகளது உட்குறிப்பு மூலம் எடுத்துச்செல்கின்றன என்பது சி. எச். டாட்ஸின் ஆய்வின் ஒரு நல்ல உதாரணமாய் இருக்கிறது."[33]

நம்மில் ஒருவரைப் போல வாழ்வதற்கு, தன்னைத் தாழ்த்துவதன் மூலமும், மற்றும் நமக்குப் பதிலாக, மரணத்தை ருசிபார்த்து தேவனுடைய குமாரராகவும், மற்றும் வாரிசுகளாகவும் ஆக்க, கிறிஸ்து நம் சுவீகாரத்தை சாத்தியமாக்கினார். மரணத்தை வெல்லுவதன் மூலம், அவர் நித்திய ஜீவனை நாம் அடையுமாறு வைத்தார். நாங்கள் கிறிஸ்தவர்களாக மாறியபோது, நாங்கள் கிறிஸ்துவின் சகோதரர்களாக, அவருடைய சபையின் பரிசுத்தமாக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆக்கப்பட்டோம். நமக்காக மரிப்பதற்கு ஆவலாய் இருந்த ஒருவருக்காக, அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி, பிதாவில் முழு நம்பிக்கை வைத்து வாழ நாம் தீர்மானிப்போமாக.

கிறிஸ்துவின் மேன்மை, பாதிக்கப்பட்டவர் (2:14-18)

**2:14-16**

**14 ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், 15 ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். 16 ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்.**

இயேசுவைப் பற்றி எழுப்பக்கூடிய மகத்தான கேள்விகளில் ஒன்று

இதுவாக இருக்கிறது: “இயேசு ஏன் மனிதசாயல் ஆனார்?” 2:14-18-ல் இந்த கேள்விக்கு மூன்று இதயத்தைத் தொடுக்கும் பதில்களைக் காண்போம்.

**வசனம் 14.** கிறிஸ்துவும் அவருடைய பிள்ளைகளும் ஒரு குடும்பமாக மாறி, மற்றும் ஒருவர் இயல்பை ஒருவர் பகிர்வதும் தேவனுடைய சித்தம் என்பதால், கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பேகூட, மனித வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய அவசியம் அவருக்கு இருந்தது. அவர் முற்றிலும் நம்மைப் போன்ற மனித இயல்புகளை எடுத்தார். பகிர்வது என்பது κοινωνία (*கொய்னோனியா*) என்பதிலிருந்து வந்ததாயும், “ஐக்கியம்” என்பதற்கான பொதுவான கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததாயும் இருக்கிறது.

NIV கூறுகிறது, “ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; “உடையவர்கள்,” மற்றும் “பகிர்ந்து” என்ற இரண்டு வினைச்சொற்கள் இரண்டு வெவ்வேறு சொல்வன்மையை பிரதிபலிக்கின்றன. முதலாவது “இனம் நீடிக்கும் வரை எப்போதும் மனிதர்களிடையே பகிரப்படும் பொதுவான இயல்புகளை குறிக்கிறது,” மற்றும் இரண்டாவதாக “மனிதகுலத்தை தானாக ஏற்றுக்கொள்வது” என்பதை வெளிப்படுத்துகிறது.[34] இயேசு மனிதனைப் போல மட்டுமே *காட்சியளித்தார்*, மற்றும் உண்மையில் மாம்சத்திலும் இரத்தத்திலும் பங்கேற்கவில்லை என்பதாக டாக்டீசம், அதாவது ஒரு ஆரம்ப “கிறிஸ்தவ” மதங்களுக்கு எதிரான கொள்கையின் மூலம், கற்றுக்கொடுக்கப்பட்டது. “டாக்டீசம்” என்ற வார்த்தை, கிரேக்க வார்த்தையான *டோக்கியோ*-ல் இருந்து வருகிறது, அதாவது “தோற்றமுடையதாயிரு” என பொருள்படுகிறது. அதாவது எபிரெயர் என்றென்றைக்கும் மறுத்து விடுகிறது, அவருடைய சோதனைகள் உண்மையானவை என்பதான பார்வையைக் காட்டுகிறது (4:14-16; 5:8).

**மரணத்தின் வல்லமை** என்னவென்று நமக்குத் தெரியாது, ஆனால் அது தேவனிடமிருந்து மக்களை பிரிக்கிறது என்பதை நாம் அறிவோம். சாத்தான் பாவத்தைத் தூண்டினான், பாவம் மரணத்தைக் கொண்டு வந்தது (ரோமர் 6:23; எபே. 2:1). நாம் பாவம் செய்தால் ஆன்மீக ரீதியில் நாம் மரிக்கிறோம், ஆனால் மரணமானது இந்த வசனத்தின் சூழமைவில், சரீரப்பிரகாரமானதாகக் காணப்படுகிறது. சாத்தான் இருள் மற்றும் மரணம் ஆகியவைகளின் உலகினில் ராஜாவாக இருக்கிறான் (கொலோ. 1:13, 14ஐ பார்க்கவும்). சாத்தானின் தோல்வியானது, இயேசுவின் உயிர்த்தெழுதலின் மூலமாக வந்தது, இது இந்த நிருபத்தில், இறுதியில் தேவனுக்கு நன்றி செலுத்தும் ஒரு பிரபுத்துவ சூத்திரத்தில் மட்டுமே (13:20) குறிப்பிட்டுள்ளது, என்றாலும், இது 6:1, 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாத்தானின் இந்த வல்லமையை அழிக்கும் பிரதான நோக்கமாக,

“வார்த்தை மாம்சமானது” (யோவான் 1:14). **வழங்க அதிகாரமற்றதை** (καταργέω, *கட்டர்ஜியோ*) என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பு அழிப்பதற்கு என பொருள்படவில்லை, KJV மொழிபெயர்ப்பின் மூலம் “அழிக்க” என பரிந்துரைத்தது. மாறாக, அது “வழங்க பயனற்றதாக” அல்லது “இல்லாமையைக் கொண்டு” என்று பொருள்படுகிறது. சாத்தானின் வல்லமையைக் குறித்து, அதே காரியத்தை யோவான் சொல்லியுள்ளான். “பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்” என்று 1 யோவான் 3:8 நமக்குத் தெரிவிக்கிறது. இயேசு ஒருவரால் மட்டுமே பூரணமாக வாழ முடிந்தது, மற்றும் இதனால் சாத்தானின் நோக்கம் தோற்கடிக்கப்பட்டது. சாத்தானை அவருடைய வாழ்க்கையின் வல்லமையினாலும், மற்றும் தேவனுடைய வார்த்தையினாலும் பிணைத்தார் (மத். 4:1-11). அவர் பிசாசுகளை விரட்டுவதற்கு முன்பு, சாத்தானைப் பிணைக்க வேண்டியிருந்தது (மத். 12:22-29). சாத்தானின் கடைசி வீழ்ச்சியும்கூட, ஒரு பிணைப்பாக சித்தரிக்கப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 20:7-10, அவனுடைய இறுதி வீழ்ச்சியைப் போல் தோன்றுகிறது, ஏனென்றால், பின்பு அவன் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான்.

இயேசு அதைக் கைப்பற்றுவதற்காக, இயேசு சுலபமாய் பாதிக்கப்படுகிற மரணத்தை சந்திக்க தன்னை தயார்படுத்தியது, பெரிய முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரையாய் இருந்தது.[35] கிறிஸ்து இயேசுவில் நிலைத்திருந்தால் மட்டுமே, அவர் நமக்கு சாத்தான், மரணம், மற்றும் கல்லறையின் மீதும் வெற்றி பெறச் செய்வார் (1 கொரி. 15:55-58).

**வசனம் 15. மரணத்தின் பயம்** வலிமை வாய்ந்தது. அதனால் தான், ஆண்கள் பலவற்றைச் செய்வர், வேறு எதுவும் அவர்களை செய்யும்படி கட்டாயப்படுத்த முடியாது. அவமானத்திற்கு முன்பு, பெரும் நம்பிக்கை கொண்ட சில துணிச்சலான ஆத்மாக்கள், மரணத்தை ஏற்றுக்கொள்வார்கள், ஆனால் “மரண பயம்,” பலருக்கு கட்டாயப்படுத்தும் வலிமை வாய்ந்த ஒரு கருவியாய் இருக்கிறது. கிறிஸ்துவே இதை நம்மிடமிருந்து அகற்றியிருந்தால், மரண பயம் அல்லது அச்சுறுத்தல் மூலம் தீமை செய்வதிலிருந்து நம்மை யாரும் வெற்றிகரமாக அச்சுறுத்திவிட முடியாது.

**இலவசம்** (ἀπαλλάξῃ, *அப்பல்லாக்ஸேய்*), இது வேறு இடங்களில், லூக்காவினால் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. லூக்கா 12:58ல், இது “தீர்மானத்துடன்” என்றும், மற்றும் அப்போஸ்தலர் 19:12ல், “விட்டு” எனவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. “பாவநிவிர்த்தி மூலம், பாவத்திலிருந்து விடுவிக்க” என்று இந்த வார்த்தை பொருள்படுகிறது. ஒருவரின் நம்பிக்கை மரணத்தின் கொடூரங்களை மேற்கொள்ளும் அளவுக்கு வலுவாக இருந்தால், பின்பு அது விசுவாசத்தை

காப்பாற்றுவதற்கான பெரும் உறுதியை அளிக்கிறது. மரண நதிக்கு வரும் ஒருவர், கிறிஸ்துவோடு ஒன்றிணைவதால், அதற்கு பயப்படத் தேவையில்லை. உண்மையில், அங்கே மேலும் மரணம் இல்லை: "அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் தேவதூதர்களைப்போல் இருக்கிறார்கள்" (லூக். 20:36). மார்ட்டின் லூதர் கூறினார், "மரணத்திற்கு எவன் பயப்படுகிறானோ அல்லது மரிப்பதற்கு விரும்பாதவனாய் இருக்கிறவன் எவனோ, அவன் போதுமானதான கிறிஸ்தவனாக இல்லை. இன்னும், அத்தகைய மக்கள் உயிர்த்தெழுதலின் விசுவாசத்தில் குறைவுள்ளவர்களாயும், மற்றும் வரவிருக்கும் நித்திய வாழ்வினைவிட, இவ்வுலக வாழ்க்கையை அதிகம் விரும்புகிறவர்களாயும் இருக்கிறார்கள்."[36]

கிரிஸ்ஸோடோம் அவரது நாளில், கிறிஸ்தவ இறுதி சடங்குகளில் காட்சிக்குரியதாக்கும் கொடூரமான பொது புலம்பல்களை விமர்சித்தார்:

> நான் பொது இடங்களில் புலம்பல்களைப் பார்த்தால், இந்த ஜீவனை விட்டு மரித்தவர்களுக்காக முணங்குபவர்கள், பெருமூச்சுவிடுபவர்கள், மற்றும் மற்ற பார்க்கச் சகிக்காத நடத்தையினாலே, இதைப்பார்க்கும் கிறிஸ்தவ சமயம் அன்றி வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள், யூதர்கள், மற்றும் மதவெறியர்கள் ஆகிய அனைவருக்கும் முன்பாக நான் வெட்கப்படுகிறேன், மற்றும் உண்மையில் இந்த காரணத்திற்காக நம்மைப்பார்த்து இகழ்ச்சியுடன் நகைக்கும் … நீங்கள் அனைவரும் இந்த வாழ்க்கையை விட்டு புலம்பலில்லாமல் வெளியேற வேண்டும் என்று தேவன்தாமே அனுமதி வழங்குவாராக![37]

தேற்றுவாரில்லாமல் அழுத ஒருவரின் இயற்கைப் பண்புகளினால், ஒரு அன்பானவரின் மரணத்தில் அவிசுவாசிகளை உருவாக்கினார் என்று அவர் நம்பினார்.

மனிதகுலமானது மரணத்தைக்கண்டு அஞ்சுவதற்கு, தேவன் திட்டமிட்டுள்ள இரண்டு காரணங்களை ஆல்பர்ட் பார்னெஸ் முன்மொழிந்தார். முதலில், பயம் மரிப்பதற்கு தயார் செய்ய மக்களை வழிநடத்துகிறது. நாம் மரிக்கப் போவதைப் பற்றி கரிசனையற்றவர் களாக இருந்தால், தேவையான ஆயத்தங்களை நாம் புறக்கணிக்க வேண்டும். இரண்டாவதாக, மக்கள் தங்களையே கொலை செய்து கொள்வதை, பயம் தடுக்கிறது. தங்கள் சொந்த வாழ்க்கையை இழந்து மரிப்பதற்கு பயமில்லாமல் இருப்பவர்களுக்கு, அவநம்பிக்கை ஏற்படலாம்.[38] நம்பிக்கையற்ற மற்றும் கீழ்ப்படியாதவர்களுக்கு "இரண்டாவது மரணத்தின்" ஒரு பயம் உள்ளது (வெளி. 20:14, 15; 21:8).

உறுதியான ஒரு விசுவாசம், கிறிஸ்தவனுக்கு மரணத்தைப்பற்றிய பயமில்லாமல் எப்படி உதவுகிறது? முதலாவதாக, அது மேலோக ஒரு வீட்டைப் பற்றி உறுதியளிக்கிறது (2 கொரி. 5:1). இரண்டாவதாக, மரணத்தின் கொடுக்கினை அது முடிவுக்கு கொண்டு வருகிறது (1 கொரி. 15:54, 55). மூன்றாவதாக, பூமியில் வாழ்வதைவிட "மிகவும் நன்றாக

இருக்கிறது” என்ற நித்தியத்தின் ஒரு நம்பிக்கையை அது தருகிறது (பிலி. 1:22, 23).

பழைய ஏற்பாட்டின் கீழ் வாழும் போது, யூதர்கள் இந்த பயத்திலிருந்து ஒருபோதும் தப்பினதில்லை. “இந்த வாழ்க்கையில் மரணமானது மனிதனை ஒருபோதும் மகிழ்ச்சியடையச் செய்யாது” என்று *மிட்ராஷ்* இல் அடங்கியுள்ளவை கூறுகிறது.[39] கிரேக்க நாடக ஆசிரியரான யூரிப்பிட்ஸ் (485-406 கி.மு.) அவனுக்கு மரணம் பற்றி பயம் இல்லை என்றால், யாரும் உண்மையிலேயே ஒரு அடிமையாக இருக்க வேண்டியதில்லை என்று எழுதியுள்ளார்.[40] அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் இயேசு மனிதகுலத்தை அத்தகைய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். அவர் கல்லறையில் இருந்து உயிர்த்தெழுந்ததால், நாமும்கூட இருப்போம் என்பது நமக்குத் தெரியும்!

**வசனம் 16. அவர் தேவதூதர்களுக்கு உதவி செய்ய மாட்டார்** என்பது இலக்கியரீதியாக, “அவர் தேவதூதர்களை பிடித்துக்கொண்டு அருகில் கொண்டிருக்கவில்லை” என்று உள்ளது. எபிரெயர் 8:9-ல், இதே வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அங்கு தேவன் “அவர்களுடைய கையைப் பிடித்து, அவர்களை [இஸ்ரவேலரை] எகிப்து தேசத்திலிருந்து வழிநடத்தினார்.” அவர் உதவி செய்யும் ஒரு பார்வையில் “பிடித்துக் கொள்கிறார்.” ரிச்சர்ட் பிரான்சிஸ் வெய்மவுத் தனது மொழிபெயர்ப்பில் சரியான கருத்தைக் கொண்டிருந்தார்: “நிச்சயமாக அவர் தேவதூதர்களுக்கு, அவர் தொடர்ந்து ஒரு உதவிக்கரம் நீட்டியிருக்கவில்லை, ஆனால் அவர் உதவிக்கரம் நீட்டியது ஆபிரகாமின் சந்ததியாருக்கே இருந்தது.” இயேசு “பிடித்துக் கொள்ள” என்ன செய்தார்? அவர் நம் “மனித இயல்பை பற்றிக் கொண்டு அதை தனது சொந்தமாக்கிக் கொண்டார்” இந்த காரணத்திற்காக, பிலிப் எட்க்கும்பே ஹூக்ஸ் கிறிஸ்துவின் அவதாரம் இது ஒரு வலுவான உரை என்று கருதுகிறார்.[41]

இங்கே, **ஆபிரகாமின் சந்ததி[யார்]** என்று அழைக்கப்பட்ட மனிதர்களுக்கு உதவ, இயேசு ஒரு மனிதனாக வாழ்ந்தார். இந்த வெளிப்பாடு யூதர்களை மட்டுமே குறிக்காது, ஆனால் இது விசுவாசத்தினால் தேவனின் பிள்ளைகள் ஆன அனைவரையும் குறிக்கும். பழைய உடன்படிக்கையின் கீழ் உள்ள விசுவாசிகள் சரியாக இருக்கவில்லை “நம்மைத்தவிர” (11:40). இந்த கருத்து பவுலின், கலாத்தியர் 3:7, 26-29இல், “விசுவாசமுள்ளவர்கள்,” “ஆபிரகாமின் பிள்ளைகள்” என்று அழைக்கப்பட்டார்கள். பவுலினால் வலியுறுத்தப்பட்ட ஒரு முக்கிய உண்மையே “விசுவாசத்தினாலே தேவனுடைய குமாரர்” என அழைக்கப்படுபவர்கள், “கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களாய்” இருக்கிறார்கள் (கலா. 3:26, 27). எல்லா கிறிஸ்தவர்களும், விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியினராய் இருக்கிறார்கள்.

13:2-ல் மறுபடியும் தேவதூதர்கள் பற்றி குறிப்பிடப்பட்டாலும், தேவதூதர்கள் கிறிஸ்துவைவிட தாழ்ந்தவர்கள், மற்றும் கிறிஸ்துவுக்குள் நாம் பெற்ற ஆசீர்வாதங்களைவிட, தேவதூதர்கள் மூலம் பெற்ற ஆசீர்வாதங்களும்கூட குறைவாகவே இருப்பது சம்பந்தமான கடைசி கலந்துரையாடலின் வசனம் 16 இது இருக்கிறது. கிறிஸ்து தன்னை ஒரு மனித ரூபத்தில் எடுத்துக்கொண்டார், ஆனால் அவர் ஏன் அவ்வாறு செய்தார் என்பதற்கான ஒரு காரணத்தைக் கொடுப்பதற்கும் இது மறுபடியும் வடிவமைக்கப்படவில்லை. அவர் தேவதூதர்களுக்கு உதவி செய்ய கரிசனை உள்ளவராய் இருக்கவில்லை, அல்லது தேவதூதர்களை மீட்பதற்காக அவர் வரவில்லை, ஆனால் நமக்கு உதவுவதற்காகவே வந்தார். அவர்கள் பரலோகத்தின் எல்லா நன்மையையும் பெற்றிருப்பதால், தேவதூதர்களுக்கு அவருடைய உதவி தேவையில்லை என்று நாம் நினைப்போம். எனினும், அவர்கள் பாவம் செய்திருந்தால், அவர் அளித்ததைவிட அவர்களுக்கு அதிக உதவி தேவைப்படுகிறது (2 பேதுரு 2:4). பாவம் செய்த தேவதூதர்கள் தாங்கள் செய்ததைப் பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும், ஆனால் மனிதன் ஏமாற்றப்பட்டான். இந்த காரணத்திற்காக, மனித விசுவாசிக்கு மன்னிப்புக்கான நம்பிக்கையை அளித்துள்ளார். “அவன் ஒரு தேவதூதனாக இருந்திருந்தால் … பின்பு இயேசு தேவதூதர்களுக்கு உதவி செய்திருக்கலாம்; ஆனால் அவர் மனிதர்களுக்கு உதவுகிறார் என்பதால், அவன் ஒரு தேவதூதனாக இருந்திருக்க முடியாது.”[42]

**2:17, 18**

**[17]அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாரா யிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதா யிருந்தது. [18]ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.**

**வசனம் 17.** கிறிஸ்து ஆபிரகாமின் வழித்தோன்றல்களுக்கு உதவும் பொருட்டு, அவர். [நமக்கு] ஒப்பாகவேண்டியதாயிருந்தது. **அவர் எவ்விதத்திலும் நம்மைப் போல் ஆனார்** (“ஒவ்வொரு விதத்திலும்,” NRSV). அவர் ஒவ்வொரு வழியிலும் பாடுபட்டார், நாம் பாடுபடுவது போல் (4:14, 15). அவர் அனுபவித்த சோதனைகளை கவனியுங்கள்: வறுமையின் சோதனைகள், சக மனிதர்களிடமிருந்து, அவரது சகோதரர்கள் மற்றும் தாயிடமிருந்தும்; நல்லெண்ணத்தோடு அவரது நண்பர்களிடமிருந்து வரும் அவசரங்கள்; சாத்தானிடம் இருந்து சோதனைகள்; உடல் துன்பத்திலிருந்து வந்த சோதனைகள் மற்றும் தேவனால் புறக்கணிக்கப்படுகிறவர்களிடமிருந்து. “ஒப்பீட்டளவில்,

நாம் சோதனையின் கருப்பு கடலின் மேற்பரப்பை மட்டுமே பார்த்திருக்கிறோம், இயேசு அதன் ஆழங்களை அடைந்திருக்கிறார். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். நம்முடைய வாழ்வில் சாத்தானைக் கடிந்துகொள்கிறார்."[43] அவர் பாடுகளை அனுபவித்துக் கொண்டு, அவர் உண்மையிலேயே நம்மிடம் பரிவு காட்டுகிறார்; அவர் சரியான மத்தியஸ்தராக இருக்கிறார். நம்முடைய **இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு** அவர் எல்லாவற்றையும் சகித்தார்.

"பிரதான ஆசாரியன்" என்ற சொற்றொடர், கிறிஸ்துவுக்கு நேரடியாக வேதாகமத்தில் பயன்படுத்தப்படுகிறது இதுவே முதல் முறையாகும். மிக உயர்ந்த சக்தியும் முக்கியத்துவமும் கொண்ட கிறிஸ்துவின் பாத்திரத்தைப் பற்றிய பகுத்தறிதலுக்காக யூத பிரதான ஆசாரியத்துவம் இந்த எழுத்தின் நேரத்தில் இருந்திருக்க வேண்டும். யூதேயத்தின் அந்த வண்ணமயமான மேலாதிக்க நிலைப்பாட்டின் தொடர்ச்சியான கவர்ச்சிகள் பழைய உடன்படிக்கைக்கு சிலவற்றை திரும்பக் கொண்டு செல்லும்.

நம்முடைய பிரதான ஆசாரியராக சேவை செய்வதில் கிறிஸ்துவின் முழுப் பணியும், **அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக**, "நிவிர்த்தி செய்வது" என்பது "பாவநிவிர்த்தி செய்வது" (KJV) அல்லது "பிரதிஷ்டை செய்வது" (NIV) ஆகும். யூதபிரதான ஆசாரியன் அவன் கொடுக்கும் பலி மூலம் ஒரு அடையாளச் செயலைச் செய்வதன் வழியாகச் செல்வான், ஆனால் அவனது செயல் உண்மையில் பாவத்தை நீக்க முடியாது. அவனது நிலையும் அவனது பணியுமாகிய இரண்டும் மிகவும் சடங்காச்சாரங்களான, பரிசுத்த வஸ்திரங்களை அணிவது, ஆரோனுக்கு அடுத்தபடியாக இருப்பது, மேலும், முதல் நூற்றாண்டில், நாட்டின் நீதித்துறை விவகாரங்களில் பங்குபெறுவது, போன்ற இவை அனைத்தும் கிறிஸ்துவின் பெரிதான பணியை முன்குறித்தது.

λάσκομαι (*ஹிலாஸ்கோமெய்*) என்னும் வார்த்தையில் இருந்து "நிவிர்த்தி செய்வது" என்னும் சொல் மொழிபெயர்க்கப்பட்டது. கிரேக்கர்கள் தங்களது தெய்வங்களின் கோபத்தை எவ்வாறு தணிக்க முயன்றார்கள் என்பதை விளக்குவதற்காக அவர்களால் இந்த வார்த்தை உபயோகிக்கப்பட்டது - புதிய ஏற்பாட்டிற்குப் புறம்பான கருத்து. அதே வார்த்தையை உடன்படிக்கைப் பெட்டியின் மீதுள்ள மூடி, பாவநிவாரணம் செய்யும் நாளிலே பாவநிவாரண பலியின் இரத்தம் தெளிக்கப்பட்ட கிருபாசனத்திற்கு செப்துவஜிந்த் உபயோகித்தது (யாத். 25:16-22). தேவன் தம்முடைய பரிசுத்தத்தின் கோரிக்கைகளை கிறிஸ்துவின் மரணத்தில் சந்தித்தார்.[44] அவரது பாடுகள் பற்றிய சிந்தனை பிலிப்ஸால் திறம்பட தெரிவிக்கப்பட்டுள்ளது. "அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே…"

வருடத்திற்கு ஒரு முறை, பிரதான ஆசாரியன் ஜனங்களுடைய பாவங்களுக்காக பிராயச்சித்தம் செய்ய, பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான். முதலாம் நூற்றாண்டில், "யாவே" என்னும் பரிசுத்த நாமம் யாம் கிப்பூர் (பாவநிவாரண நாள்) அன்று பேசப்பட்டதாகக் கூறப்பட்டது. அதன் சரியான உச்சரிப்பு மறைந்து விட்டதில் ஆச்சரியமில்லை! "யேகோவா" என்னும் பெயர், சரியான உச்சரிப்பு என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு கலப்புச் சொல் மட்டுமே.

இந்த நிருபத்தின் ஒரு முக்கிய நோக்கம், யூத பிரதான ஆசாரியன் இயேசுவைவிட தரத்தில் தாழ்ந்தவன் - இருந்தாலும் ஒரு வகையில் - நமக்கு இரட்சிப்பைப் பெற்றுத் தந்த இயேசுவைப் போன்றவன் என்பதைத் தெரிவிப்பதாகும். கிறிஸ்துவுக்குள் "நாம் தேவனுடைய நீதியாக மாறுகிறோம்" (2 கொரி. 5:18-21). பாவங்களை நிவிர்த்தி செய்ய அவருடைய அவதாரம் எடுக்க வேண்டியது அவசியமாக இருந்தது.[45] பாவநிவாரணம் செய்ய மனிதர்களுள் உள்ள எந்த பிரதான ஆசாரியனையும் விட அதிகமான பலி செலுத்த வேண்டிய அவசியம் இருந்தது.

நாம் வெட்கப்படும்படி முன்பு செய்த ஏதாவது ஒன்றிற்கு மன்னிப்பை அனுபவிக்கும் வரை, இயேசு கொண்டு வந்திருந்த விளைவு, அதைப் போலவே நம்மை ஈர்க்க முடியாது. கிறிஸ்து நமக்காக மரிக்காமல், நம்முடைய நிலைமையை அறிந்திருந்த போதிலும், அவருடைய வருகைக்கு அப்பாற்பட்டு, அவருடைய இரக்கத்தையும் நம்பி மிகவும் சிரமப்படுவோம். "ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்கு சமம்; ஆனால் ஒரு செயல்முறை விளக்கம் 10,000 வார்த்தைகளின் மதிப்பைக் கொண்டது. அதனால்தான் இயேசு பூமிக்கு வந்தார்."[46] நம்முடைய எல்லா வேதனைகளையும் அவர் அனுபவித்து, அவருடைய அன்பை வெளிப்படுத்தினார்; ஆகையால், நாம் சோதிக்கப்படுகையில் நமக்கு எப்படி உதவி செய்ய வேண்டும் என்பதை அவர் அறிவார். இல்லையெனில், நமக்கு உதவி செய்ய வல்லமை கொண்டிருந்திருப்பார். ஆனால் இப்போது நம்முடன் பரிவிரக்கம் கொள்ள அவர் தகுதியுள்ளவராக இருக்கிறார்.

**வசனம் 18.** "உதவிக்கு வரும்" அல்லது "உதவிசெய்ய" (KJV), (βοηθέω, *போயதியோ*), எனும் வார்த்தை, "தேவைப்படும் போது உதவியைப் பெற வேண்டும்." என்று பொருள் உணரமுடியும்.[47] "கொக்கி" சொற்கள் என்று குறிப்பிடப்படும் "உண்மையுள்ள" மற்றும் "பிரதான ஆசாரியன்" ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த வசனங்கள் உடனடியாக பின்வரும் 3:1, 2 உடன் இணைக்கப்படுகின்றன.[48]

**சோதிக்கப்படுகிறவர்களுக்கு** கிறிஸ்து உதவி செய்கிறார். இந்த நிருபத்தின் பெறுநர்கள் யூத மதத்திற்கு திரும்புவதற்கு கடுமையாக சோதிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய

வேண்டியதில்லை என ஊக்கப்படுத்தப்பட்டனர். அவர்களின் பிரதான ஆசாரியர், அவருடைய பரலோக மேன்மையில், தேவனுக்கு முன்பாக அவர்களுக்கு பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார் என்று அவர்கள் கூறப்பட்டனர் (எபி. 7:25). அவர் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார் என்பதை அறிந்திருப்பது இன்னும் ஊக்கமளிக்கிறது. இந்த உண்மையை நாம் நம்புகின்ற அளவிற்கு நமது விசுவாசத்தின் அளவும் இருக்கும்!

அவர் நம் முழுமையான பிரதான ஆசாரியராக பணியாற்றலாம் என்பதற்காக இயேசு மனிதகுலத்தில் ஒரு காலத்திற்குப் பகிர்ந்துகொண்டார். தேவதூதர்களை விட சற்று சிறியவராக உண்டாக்கப்பட்டதால், சோதனைகள் மற்றும் துன்பங்களைப் பற்றிய ஒரு புரிதல் கிடைத்தது. அவரது படைப்பின் பகுதியாக வாழ்வது பின்னர் மரிப்பது என்பதன் மூலம், அவர் மரணத்தின் கட்டுகளை உடைக்க முடிந்தது. பூமிக்குரிய சோதனைகளுக்கும், நமது நிமித்தம் சிலுவையில் அறையப்படுதலுக்குமான அவருடைய விருப்பம், நம் மீதான அவரது ஈடு இணையற்ற அன்பிற்குச் சாட்சியமிடுகிறது. அவர் வழங்கிய பாவநிவிர்த்தி இல்லாமல் எப்படியாக நாம் இழந்திருப்போம்!

## மேலும் ஆய்வுக்கு: சாத்தான்

பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு இயேசு வந்தார் (வசனம் 14). வெளிப்படையாக, இந்த அழிவு பிசாசின் சில "வல்லமை" யால் ஆனதாகும். இந்த வெளிப்பாடு கொடுக்கப்பட்ட வரையில், சாத்தான் "மரண தூதன்" என்று விவரிக்கப்பட்டு இருக்கலாம். கடவுளுக்கும் சாத்தானுக்கும் இடையேயான தீர்க்கமான சந்திப்பு சிலுவையில் ஏற்பட்டது.[49] இது நிச்சயமாகவே இயேசு வந்ததன் முக்கிய காரணியாக இருந்தது: சாத்தானின் அதிகாரத்தை உடைக்க வேண்டியிருந்தது. கிறிஸ்து அவனைத் தோற்கடித்துவிட்டதால், சாத்தானுக்கு இந்த உலகில் எஞ்சியிருக்கும் வல்லமைக்காக அவனுக்கு மிகுந்த மதிப்பளிப்பை வழங்காமல் இருப்போமாக![50] "பிசாசும் மற்றும் சாத்தானும்" (இரண்டும் "குற்றஞ்சாட்டினவன்," என்று பொருள் தருகிறது. எபிரெயு, கிரேக்கம் மற்றும் ஆங்கிலத்தில் அதே பெயரைக் குறிக்கிறது; வெளி. 20:2) மனிதகுலத்தை ஏமாற்றி அந்த பாவத்தின் விளைவாக மரணத்தைக் கொண்டு வந்தான்.[51] உண்மையிலேயே, அவன் ஒவ்வொரு சாத்தியமான வழியிலும் உண்மை அல்லாதவனாக இருக்கிறான்; அவன் ஒரு போலியானவன். உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8); அவன் மேசியாவாகிய உண்மையான "யூதா கோத்திரச் சிங்கம்" அல்ல (வெளி. 5:5).

தேவன் அல்லாமல் சாத்தான்தான் மரணத்திற்குக் காரணம் என்று

யூதர்கள் நம்பினர். இயேசு சாத்தானைப் பற்றி, "அவன் … சத்தியத்திலே நிலைநிற்கவில்லை" என்று, அவன் ஒருகாலத்தில் அவ்வாறு இருந்தான் என்பதைச் சுட்டிக்காட்டினார். அவன் ஆதிமுதற்கொண்டு ஒரு "பொய்யன்" மற்றும் ஒரு "கொலைபாதகன்" ஆக இருந்து மனிதர்களை பாவத்திற்குள்ளாக ஏமாற்றி, அதன் மூலம் மரணத்திற்குக் காரணமானான் (யோவான் 8:44). "பிசாசு அடைந்த ஆக்கினையிலே" (1 தீமோ. 3:6) என்னும் சொற்றொடர் ஒரு ஆக்கினையாக இருக்க முடியாது - பிசாசு யாரையும் தண்டனைக்குள்ளாகச் செய்வான். அவன் அந்த ஆற்றலைக் கொண்டிருக்கிறான் என்பது சந்தேகமே. பதிலாக, பெருமையின் விளைவாக "பிசாசு ஆக்கினை அடைந்தான்" என்று இந்த வார்த்தைகள் பொருள் கொள்ளலாம். நமது மரணத்திற்கு அவன் மறைமுகமாகவே காரணமாக இருக்கிறான்.

"பாவஞ்செய்த தூதர்களை … நரகத்திலே தள்ளி" என்று பேதுரு கூறினான் (2 பேதுரு 2:4). வெளிப்படையாக பரலோகத்திலிருந்து தள்ளிவிடப்பட்ட பிறகு சாத்தான் வெற்றிகரமாக மனிதனை வீழ்ச்சியடையச் செய்தான். தேவன் இதை எதற்காக அனுமதித்தார் என்று நாம் கூற முடியாது - ஆனால், தேவனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மட்டுமே சாத்தான் கொண்டிருக்க முடியும் என்பதை நிச்சயமாகக் கூற முடியும் (யோபு 1:12; 2:6). சோதனை தாங்கிக் கொள்ளப்படும்போது, அது ஒருவனைச் சிறந்தவனாகச் செய்து, தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது என்பதால், மனிதன் சோதிக்கப்பட்டு பலனடைவதற்காக ஒருவேளை தேவன் சாத்தானுடைய செயல்பாட்டை அனுமதித்திருக்கலாம் (யோபின் பிந்தைய வாழ்வில் நடந்தது போல). சாத்தானுடைய ஆலோசனையின் விளைவாக ஆவிக்குரிய பிரகாரமாகவும் சரீர பிரகாரமாகவும் மனிதகுலம் மரித்தது. ஒரு அர்த்தத்தில், இது மனிதனைக் கட்டுப்படுத்தி, சாத்தானை இவ்வுலகத்தின் அதிபதியாகச் செய்தது (யோவான் 12:31; 14:30; 16:11; காண்க 2 கொரி. 4:4). பின்பு, கிட்டத்தட்ட மனிதன் சாத்தானுக்கு அடிமையாக மாறினான் (யோவான் 8:34; ரோமர் 6:16).

## பயன்பாடு

### விட்டு விலகச் செய்வது எது? (2:1-4)

விலகிச்செல்லும் ஆபத்து பல ஆதாரங்களில் இருந்து வரலாம். *சிலர் கற்றுக்கொண்ட சத்தியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளவில்லை.* சத்தியத்தைக் கற்றுக்கொள்வதற்கான கதவு திறக்கப்பட்டிருக்கும் பொழுது, அது ஒருவனுடைய ஆத்துமாவைக் காப்பாற்றும், அநேகர் தங்கள் அன்றாடக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் இல்லாததாக அதை ஒதுக்கி விட்டனர். இது பின்பற்றுவதற்கு

ஆபத்தானதாகும். நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்குறித்தும், அதனால் வரும் ஆபத்துகளைப் பற்றியும் பவுல் பேலிக்ஸை எச்சரித்தான் (அப். 24:25). பேலிக்ஸ் அப்படிப்பட்ட காரியங்களைக் கவனிக்க அதிக சமயம் வாய்க்க வேண்டுமென விரும்பினான். ஒரு "சமயம் வாய்ப்பது" எப்போதும் நிகழ்வதில்லை. பாவத்திலிருந்து மனந்திரும்புதல் எப்போதும் எளிதானதும், தற்செயலாக நிகழ்வதும் அல்ல. வரவிருக்கும் நியாயத்தீர்ப்பினை அன்னிய பாவிகளுக்கு நினைவூட்டுவதற்கு நாம் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்த வேண்டும். மக்கள் கீழ்ப்படியும்படி வற்புறுத்துவதற்காக பவுல் வருகிற நியாயத்தீர்ப்பை அடிப்படையாகப் பயன்படுத்தினான். நியாயத்தீர்ப்பின் நாள் வரும் என்று அவன் அறிந்திருந்தான், அது கர்த்தருக்கு பயப்படுவதற்கான காரணமாக இருக்கிறது (2 கொரி. 5:10, 11).

*விலகிச் செல்வதற்கான ஒரு காரணம், புதிய உடன்படிக்கையின் கீழ் நமது அதிகமான பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகிறது என்று நினைத்துக் கொள்கிறோம்.* பழைய உடன்படிக்கையின் தசமபாக தேவையைப் படித்துவிட்டு, "நான் அந்தக் கடுமையான அமைப்பின் கீழ் வாழ்ந்து அவ்வளவு அதிகமாகக் கொடுக்க வேண்டியது இல்லை என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்" என்று நினைத்துக் கொள்ளலாம். உண்மையில், புதிய ஏற்பாட்டில் நமது பொறுப்பு அதிகமாகிறது; உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்பதற்கு, ஒரு யூத முறைமையைக் காப்பாற்றுவதை விட மிகுந்த பெருந்தகைமை தேவைப்படுகிறது. சிலர் குறைந்தபட்சமான சிலவற்றைச் செய்து வெற்றி பெறவும், பரிசுத்தவான்களாக வளரவும் முயலுகிறார்கள். இயேசு, "இரண்டாவது மைல் செல்வதில்" உள்ள மகிழ்ச்சியைக் கற்பித்தார் (காண்க மத். 5:41). நமக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பும் நாம் இன்னும், "அப்பிரயோஜனமான ஊழியக்காரர்" என்பதையும் கற்பித்தார் (லூக். 17:10).

*இந்த வாழ்க்கையின் மகிழ்ச்சிகளால் நாம் எளிதில் கவர்ந்து இழுக்கப்படுவது விலகிச் செல்வதற்கான மிகப்பெரிய காரணியாக இருக்கலாம்.* நமது இருதயம் எளிதாக இந்த "பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு," பலன்கொடாதிருக்கும் (லூக். 8:14). ஆவிக்குரிய ஆர்வத்துடன் தொடங்கும் பல இளைஞர்களை நாம் காண்கிறோம், ஆனால் ஒருபோதும் ஆழமான விசுவாசத்திற்குள் வருவது இல்லை. அவர்கள் உணராமலேயே, அடிக்கடி தங்கள் ஆத்துமாவின் நித்திய அழிவிற்கு விலகிச் செல்கிறார்கள். மகிழ்ச்சி நம்மை தேவனிடமிருந்து விலக்கி வைக்கும்போது, நாம் நம்பிக்கையற்ற வகையில் முக்கியத்துவத்தை இழக்கிறோம். "எனக்கு நேரம் இல்லை" என்பதாக நாம் நினைக்க தொடங்கி, மகிழ்ச்சியை மையமாகக் கொண்டு

நியாயப்படுத்த போலி காரணம் கூறுகிறோம்.

சுவிசேஷம் தொடர்ந்து இரட்சிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கிறது (ரோமர் 1:16). ஒரு சிறுவனைச் சுத்தம் செய்வதற்கு, அவனது தோலில் சோப்பு பயன்படுத்த வேண்டும் என்பதைப் போல, நமது பாவத்தைக் கழுவ சுவிசேஷம் பயன்படுத்தப்பட வேண்டும். வேதாகமத்தில் உள்ள ஏராளமான உண்மை இந்த உலகத்தை இரட்சிக்கும்; ஒரு மருந்து எடுத்துக் கொள்ளப்படாவிட்டால் நாம் குணமடைய முடியாது, அதேபோல சுவிசேஷத்தைக் கேட்டு, கீழ்ப்படியாவிட்டால் இரட்சிப்படைய முடியாது.

**பாவம் என்றால் என்ன (2:1, 2)**

பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட பொருளாசை மரணத்தின் ஒரு உதாரணம் ஆகான் (யோசுவா 7), புதிய ஏற்பாட்டில் அதே முடிவில் துன்புற்ற ஒரு தம்பதியர் அனனியா மற்றும் சப்பீராள் ஆவார் (அப். 5). பாவமானது தேவனுடைய குறிப்பிட்ட சித்தத்தை மீறுவதாகும். 1 யோவான் 3:4-ல், “அக்கிரமம்” என்பது நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகவோ அல்லது அதை “மீறுகிறது” என்று பொருள். இதற்கான வார்த்தை (ἀνομία, *அனோமியா*), “சட்டத்திற்கு எதிரானது.” என்பதாகும். விழுந்துபோகும் அநேக கிறிஸ்தவர்கள் வெளிப்படையான ஒழுக்க மீறல்களுக்குக் கண்டிக்கப்பட மாட்டார்கள், ஆனால் அவர்கள் என்ன செய்ய வேண்டுமோ அதற்குப் புறக்கணிக்கப்படுகிறார்கள். நித்திய இரட்சிப்புக்கு உறுதியாக இருக்க, 2 பேதுரு 1:5-11ல் உள்ள “கிறிஸ்தவ கிருபைகள்” சேர்க்கப்பட வேண்டும். ஒருவன் அதைச் செய்தால், ஒருக்காலும் இடறிவிழுவதில்லை (வசனம் 10). ஆகவே, பேதுரு நிலைநாட்டி இருப்பவற்றை அனுசரித்தால், கிருபையிலிருந்து ஒருபோதும் விழுவதில்லை. அவனது விசுவாச “தார்மீக சிறப்பம்சத்தை” சேர்ப்பதன் மூலம் சரியான திசையில் ஒரு முற்போக்கான வளர்ச்சியை ஒருவர் அனுபவிக்க முடியும் (வசனம் 5) மேலும் படிப்படியாக, அந்தப் பட்டியலின் மூலம் அவ்வாறு இருக்கமுடியும்.

**பாவங்களால் பரிசுத்தவான்கள் (2:1-4)**

வாரன் டபள்யு. வெய்ர்ஸ்பி அவர்கள், “பரிசுத்தவான்களின் பாவங்கள்” என்ற தலைப்பில் தொடர்ச்சியான பிரசங்கம் செய்த ஒரு பிரசங்கியாரைப் பற்றி சொன்னார். அந்த பிரசங்கியார் சபையின் ஒரு உறுப்பினரால் தீவிரமாக கடிந்துரைக்கப்பட்டிருந்தார். இவை அனைத்திற்கும் பிறகு அந்த உறுப்பினர் “கிறிஸ்தவர்களின் வாழ்விலிருக்கிற பாவமானது மற்றவர்களின் வாழ்விலிருக்கிற பாவத்தை விட வேறுபட்டது” என்று அவர் கூறுகிறார். அதற்கு “ஆம்” என்று அந்த ஊழியர் பதிலளித்தார். “இது அதை விட மிகவும் மோசமானது.”[52]

### நாம் எப்படி தப்பிப்பது? (2:4)

2:4 லிருக்கிற வினாவானது பதிலை சுட்டுகிற பொருளுடைய சொல்லாட்சியாக இருக்கிறது: *இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்?* இதற்கான பதில் 2 தெசலோனிக்கேயர் 1:7-9ல் வெளிப்படையாக கூறப்பட்டிருக்கிறது. அதில் யாரோ ஒருவருடைய இருதயமானது இரட்சிப்பின் சாத்திய எல்லைக்கு அப்பாற்பட்டு கடினமாக மாறிப்போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை நாம் எபிரெயர் 6:4-6 மற்றும் 10:25-29 ஆகிய வசனங்களை படிக்கும்போது உண்மையானதாக இருப்பதை காண முடியும். 1 தீமோத்தேயு 4:1-3ல் சிலர் "மனசாட்சியிலே சூடுண்ட பொய்யர்" என்று கூறுகிறார், அவர்கள் சத்தியத்திற்கு பதிலாக பொய்யைக் கூறுவார்கள். ஆட்டு மந்தையில் தோலின் மேல் சூடிடப்பட்டபின்பு அவைகளுடைய மயிரின் வளர்ச்சியை தடுப்பதுப் போன்று, சத்தியத்தின் தாக்கம் ஏற்படாத வண்ணம் மனசாட்சியானது சூடுண்ட நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் என்று மேலும் அவர் கூறுகிறார்.

எபிரெயர் 6:4-6ல் இந்த கோடானது விழுந்து போகுதலால் கடக்கப்படக் கூடும் என்று தெரிவிக்கிறது. இது ஆராதனையை அலட்சியம் செய்ததினால் ஆரம்பமாகி "தேவ குமாரனைக் காலின் கீழ் மிதித்துப்போடும்" ஆவியை வளர்க்கிற பாவத்தை "விருப்பப்பட்டு செய்வதன்" மூலம் தொடர்கிறதாக எபிரெயர் 10:25-29 சுட்டுகிறது. "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (10:31). இதைப் போன்ற வேதபகுதிகள் பவுல்; "கர்த்தருக்கு பயப்படத்தக்கதென்று அறிந்து மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம்" என்று சொன்னது ஏன் என்பதை நாம் புரிந்து கொள்ள உதவி செய்கிறது (2 கொரி. 5:10, 11). நாம் உண்மையற்றவர்களாக இருந்தால், நம்மை பாதுகாத்துக்கொள்ள தேவனுடைய கிருபையின் மேல் சார்ந்திருக்க முடியாது. எனவே நாம் இந்த வாழ்வில் நம்பிக்கையற்ற நிலைமையை மட்டுமல்லாமல் நித்தியமான அழிவைப் பெறும் சாத்தியத்தையும் விளைவிக்கும் அழிவின் ஆபத்தைக் குறித்து விழிப்புணர்வுடையவர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாக இருக்கிறது.

### அற்புதங்கள் அவசியமற்றதாக இருக்கிறது

அற்புதங்கள் நிறுத்தப்பட்டுவிட்டது; செய்தியானது முற்றிலும் உறுதியாக்கப்பட்டப் போது, அவைகள் தேவையற்றவைகளாக மாறிப்போனது. இந்த உறுதிப்படுத்தும் செயல்முறையானது ஏற்கெனவே கடந்த காலத்திலிருந்ததாக மாற்கு 16:20 அறிவிக்கிறது. அற்புதங்களானது கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட தேவைகளை

சந்திப்பதற்கானதல்ல. ஒருவேளை இதன் காரணமாகவே தீமோத்தேயு தன்னுடைய வயிற்று பெலவீனத்திற்கு "கொஞ்சம் திராட்சரசம்" எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது (1 தீமோ. 5:23). ஒருவேளை நாம் பவுலை இவ்வாறு கேட்கக் கூடும்: "நீர் அந்த வாலிபனான தீமோத்தேயுவை உங்களுடைய அற்புத வரங்களால் ஏன் குணப்படுத்த முடியவில்லை?" பவுல் துரோப்பீமுவை வியாதியாக இருக்கும்போது மிலேத்துவில் விட்டு வந்துவிட்டார் (2 தீமோ. 4:20) இந்த செயலுக்காக பவுலை நாம் கடிந்துக் கொள்ள முடியுமா?

ஒரு காயத்தை உடனடியாக குணமாக்கக் கூடிய ஒரு நபர் இன்றைய காலத்தில் ஒருவரும் இல்லை. அப்படியிருந்தால் அது ஒரு அற்புதமாக இருக்கும்.

**விசுவாசமான ஜெபம்**

இன்றைக்கு கிறிஸ்துவின் வல்லமையால் குணமாக்குவதாக உரிமைகோருகிற பிரசங்கியார்கள் அனைவரும் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க மூப்பரை (பன்மை) அழைக்காமல் அவர்களுடைய மேய்ப்பரை (ஒருமை) அழைக்கின்றனர். பவுல், ஆவிக்குரிய வரங்களை நிச்சயமாக பெற்றிருக்கிற மூப்பர்களின் ஜெபத்தினாலும், விசுவாசத்தினாலும் குணமாகுதலை உறுதிப்படுத்தினார் (1 கொரி. 12:9; யாக். 5:14-16). இன்றைக்கு வியாதியஸ்தர்கள் "நீங்கள் போதுமான அளவு விசுவாசத்தைப் பெற்றிருந்தால் நீங்கள் குணமாக்கப்படுவீர்கள்" என்று சொல்லப்படுகிறார்கள். எப்படியாயினும் யாக்கோபு ஜெபிக்கிறவனுடைய விசுவாசத்தை பொருள்படுத்தும் விசுவாசமுள்ள ஜெபத்தைப்பற்றி பேசுகிறார். இங்கு எழுகின்ற கேள்வி யாதெனில் "ஒருவேளை விசுவாசமுள்ள மக்களுக்கு சுகம் கிடைக்கின்றபோது, வாழ்நாளெல்லாம் பாவத்தில் வாழ்ந்த ஒருவருக்கு கொடுக்கப்படும்போது, ஒன்றும் அறியாத சிறுபிள்ளைகள் ஏன் மரிக்க வேண்டும்?" சில சமயங்களில் தேவனுடைய வழிகள் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தாலும், சுவிசேஷமானது நித்திய ஜீவனை பெருதலை விளைவிக்கும்படிக்கு விசுவாசிக்கப்பட வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதே அற்புதங்களின் நோக்கமாக இருக்கிறது என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகிறது (யோவான் 20:30, 31). ஆக தொடர்ச்சியான உறுதிப்படுத்துதல் அவசியமில்லை.

யாக்கோபு 5ல் காணப்படுகிற சூழலானது மூப்பர்கள் அற்புத வல்லமை பெற்றிருந்த காலம் வரை வரையறுக்கப்பட்டிருந்தது. அந்த வல்லமைக்கு ஒப்பிடுகிற அளவிற்கு இன்றைக்கு மூப்பர்கள் நம்மிடம் இல்லை. அற்புத சுகமாக்குதல் உறுதியாக நடை பெற இருப்பதினால் எண்ணெய் பூசுதலானது ஒரு மகிழ்ச்சியின் அடையாளத்தை பெற்றிருக்க வேண்டும். சாத்தியமாக, அபிஷேகமானது சுத்திகரிப்பின்

அடையாளமாகவும், உடை மற்றும் அதைப் போன்ற சுகமாக்குதலை கொண்டாடுவதற்காக எழுதல் போன்றவற்றை குறிப்பிடுகிறது. ஒருவேளை இது "மகிழ்ச்சியின் எண்ணெய்யாக இருக்கக் கூடும்" (சங். 45:6, 7; எபி. 1:8, 9ல் மேற்கோளிடப்படுகிறது). பந்தியில் உணவருந்துவது மற்றும் எண்ணெயால் அபிஷேகம் செய்வது சங்கீதம் 23:5ல் கூறப்பட்டிருப்பதுபோன்று எண்ணெயானது ஒரு மகிழ்ச்சியான நிகழ்வின் அடையாளமாக இருக்கிறது.

"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார்" (எபி. 13:8), ஆனால் இந்த உண்மை அவர் ஏற்கெனவே அற்புதங்களை செய்ததுபோலவே, இன்றும் அற்புதங்களை செய்கிறதாக பொருள்படுத்தாது. அவர் முன்னர் மனிதரோடு நடந்தார், ஆனால் தற்போது அவர் நம்மோடு மாம்சத்திலில்லை. தேவன் மனிதனை மண்ணிலிருந்து படைத்தார், ஆனால் அவர் தற்போது அவர் அப்படி நேரடியாக செய்வதில்லை. கிறிஸ்து எப்போதும் மாறாதவராக இருக்கிறார், ஆனால் அவர் எப்போதும் அதே பாணியில் செய்வதில்லை.

**மக்கள் மீதான தேவனுடைய அக்கறை (2:6-8)**

நாம் இந்த காரியத்தை சிந்திக்கும்போது, தேவன் அவருடைய எல்லையற்ற மேன்மையில், இந்த சிறிய, பரிதாபத்திற்குரிய பிராந்தியத்திலுள்ள கூழாங்கற்களின் மீது அக்கறைக்கொள்கிறார்! வானியியல் தொலைநோக்கி மற்றும் இதர அறிவியல் வளர்ச்சிகளின் மூலம் விண்வெளியானது எவ்வளவு பரந்தது மற்றும் புரிய இயலாதது என்று கற்றுக் கொள்ளுகிறோம். அற்பமான சூரியனே ஒப்பீட்டளவில் நம்முடைய சொந்த சூரிய குடும்பத்தின் மையமாக இருக்கிறது. நம்முடைய நட்சத்திர கூட்டத்தின் மையத்திலிருந்து 35,000 ஒளியாண்டுகளுக்கும் அதிகமான இருப்பதாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அண்டசராசரத்தையும்; படைத்தவராகிய தேவன், நம்முடைய இந்த சிறிய கோளில் தம்முடைய குமாரனின் ஆளத்துவத்தில் உருவெடுத்து வந்தார்.

*நியூஸ் வீக்* என்ற இதழ் 2002ல் சூரியனைப்பற்றி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது, அதில் சூரியன் கடந்த ஆண்டை விட இதுவரை விஞ்ஞானிகள் இதுவரை கண்டிராத அளவிற்கு மிகவும் பெரிய அளவில் வெப்பத்தை கட்டவிழ்த்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது. சூரிய குடும்பத்திலிருந்து வெளியே "கொடிய கதிர் வீச்சு" "பெரும் அளவில் வெளியேற்றப்பட்டது" ஒரு நெருப்பின் கொழுந்து பல மில்லியன் மைல்கள் நீட்டப்பட்டிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக, சூரிய குடும்பமானது பெரியதாக இருக்கிறது, மற்றும் பூமியானது ஒரு சிறிய புள்ளியாக இருக்கிறது. இந்த விரிவு நம்மை உயிரோடு விட்டு வைத்திருக்கிறது. ஆனால் ஒருவேளை எப்போதுமாக இருக்க முடியாது.

ஒரு "நேரடியான கதிர்வீச்சின் தாக்கமானது, சக்தியை தடை செய்வதற்கும், தொடர்புகள் தோல்வியடைவதற்கும், மற்றும் கதிர்வீச்சால் ஏற்படும் பிறப்பு குறைபாடுகளுக்கும் காரணமாக இருக்கக் கூடும், ஆனால் (நம்ப முடியாத) வட முனை பிழம்பொறியாக குறிப்பிட முடியாது." இதன் ஆசிரியர் "இதை விடவும் ஒரு பெரிய மென்மையான பொருள் பெரிய ஆபத்தை கருவுறச் செய்யக் கூடும்," ஆனால் "வேறுபாடுகள் ஏறத்தாழ நெடுந்தொலைவிலுள்ளது" என்று அனுமதிக்கிறார்.[53] இவ்வளவு பெரியவன் காற்றின்வீச்சை பூமியை அழிப்பதற்கு ஆண்டவர் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதை கற்பனை செய்வது எளிதானதாக இருக்கிறது (2 பேதுரு 3:10-13). தேவன் தம்முடைய வார்த்தையை பேசும்போது இந்த உலகத்தை அழிக்க அனுமதிப்பார், ஆனால் அதேசமயம் அவர் நமக்கு மனந்திரும்புவதற்கும் தருணத்தைத் தருவார் (2 பேதுரு 3:9). தேவன் இந்த அண்டசராசரத்தை தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

**மனந்திரும்புதலுக்கான நேரம் (2:9, 10)**

ஒரு பாவியை மனந்திரும்பச் செய்யும் காரணம் எது? இது எட்ய்ஸ் போன்று, பெரும்பான்மையான மனிதர்களை தங்கள் உணர்வின் நிலைக்கு கொண்டு வர உதவிபுரியும், வென்றடக்கப்படாத ஒரு உடல் நலிவாகுமா? செப்டம்பர் 11, 2001ல் நியூயார்க் பட்டணத்தின் பெண்டகன் மீதான தீவிரவாதிகளின் தாக்குதலானது பல உயிர்களை வாங்கிக் கொண்டது, மற்றும் ஒரு பென்சில்வேனியா நிலமானது அமெரிக்கர்களை ஒரு உயர் நிலை ஆவிக்குரிய வாழ்விற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியதுபோன்று காணப்படுகிறது. தீவிரவாதிகளின் தொடர்ச்சியான மற்றொரு செயலால் அல்லது ஒரு மரணத்தின் விளைவாக அல்லது ஒரு புயல் அல்லது ஒரு பூமியதிர்ச்சியின் அழிவால் ஒரு பெரும் எழுப்புதல் எளிதாக நடக்கக்கூடும். இதைப் போன்ற சோக நிகழ்வுகள் மக்களை விழிப்புணர்வுள்ளவர்களாக்கி, அவர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள இயலாது என்பதைக் காட்டி, மற்றும் ஒன்றான ஜீவனுள்ள மெய்தேவனிடம் திரும்பச் செய்யும். லூக்கா 13:1-5ல் இயேசுவானவர் தற்செயலான மரணம் மற்றும் உள்நோக்கமுள்ள மரணம் இரண்டும் மக்களை மனந்திரும்புதலுக்கு வலியுறுத்துவதை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தினார். அழிந்துப்போனவர்கள் உயிரோடு விடப்பட்டவர்களை விட இன்னமும் துன்மார்க்கர் அல்லவென்று அவர் கூறினார்; ஆனால் அவர்களுடைய மரணமானது நம்மை மனந்திரும்புவதற்கு புத்திமதி சொல்கிறதாக இருக்க வேண்டும். இயேசு பயன்படுத்தினதை போன்றே நாம் தற்கால நிகழ்களை பயன்படுத்தவேண்டும்.

**நீதிமானாக்கும் மன்னிப்பு (2:9, 10)**

இந்த உலகத்தை இரட்சிப்பதற்கு தேவன் தம்முடைய குமாரனின் மரணத்தை தவிர்த்து ஒருவேளை சாத்தியமாக இருக்குமென்றால் வேறொரு வழியை கண்டுபிடித்திருக்கக் கூடும். அப்படியென்றால் தேவன் பாவத்திற்கான விலைக்கிரயம் கொடுப்பது எப்படி? நம்முடைய ஒரு சொந்தப் பாவத்திற்கும் நாம் விலைக்கிரயத்தைக் கொடுத்து மன்னிப்பைப் பெற இயலாதபடிக்கு பாவமானது மிகவும் கொடுமையானது, மிகவும் கொடியது மற்றும் மிகப்பெரியது.

அவர் மனித இனத்தின் மீது கொண்ட அன்பின் காரணத்தால், பாவத்தின் விலைக்கிரயத்தைக் கொடுக்க ஒருவழியை கண்டுபிடித்தார். இது முழு விலைக்கிரயமாகிய பூரணமான பலியை எதிர்பார்க்கிறது. இந்த நிலையை அவருடைய குமாரன் மட்டுமே சந்திக்க முடியும். அந்த குமாரனாகிய கிறிஸ்து மனித வடிவாக எடுக்க சம்மதித்து, இந்த பூமியின் மேல் வாழ்ந்து மனித இனத்தின் பாவத்திற்காக மரித்தார். அவர் இப்படியாக மாறினார் "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி. 5:21).

தேவன், கிறிஸ்தவ முறைமைக்கு உட்பட்டு, உண்மையான பலியை எதிர்ப்பார்த்த கடனுக்கு விலைக்கிரயத்தைக் கொடுத்ததற்கு ஒரு அர்த்தத்தைக் கொண்டிருந்தார். பல மதங்கள் மீறுதலுக்கான விலைக்கிரயம் அவசியப்படாத கடவுளை ஏற்றுக் கொள்கின்றன. ஆனால் ஒரு தோராயமாக ஒரு சிலர் தண்டிக்கப்பட்டும் மற்றவர்கள் தங்கள் பாவத்திற்காக இரட்சிக்கப்படக் கூடும் என்று யார் தீர்மானிப்பது? ஆக அவர்கள் தேவனுடைய நீதியை நிலைநிறுத்தும் இறையியல் முறையை பெற்றிருக்கவில்லை. விலைக்கிரயம் கொடுத்தலெனும் கிறிஸ்தவ கருத்து அல்லது வெறுமனே "நான் நன்றாக இருப்பதினால் எல்லா பாவமும் மன்னிக்கப்பட்டது" (காண்க ரோமர் 3:23-26) என்று கூறுகிற தேவன், இதில் எது மிகவும் நியாயமானதாக இருக்கிறது?

**கிறிஸ்துவின் பாடுகளுக்கு ஆட்சேபனை (2:10)**

மேசியாவானவர் பாடுபட்டு மரித்தார் என்ற உண்மையானது பல எபிரெய யூதருக்கு அவமரியாதையாக இருந்தது. இது வேத வாக்கியத்தின்படியானது என்பதை அறியவேண்டியது மட்டுமல்ல, அது முற்றிலும் அவர்களுடைய நன்மைக்கானது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டியதாக இருந்தது. பல நூற்றாண்டுகளாக யூதரைப்போன்று பாடுபட்ட ஒரு மக்கள் குழுவினருக்கு அவர்கள் பாடுபட்டது போன்று தங்களுக்காக பாடுபட்ட அவர்களுடைய இராஜாவை போற்றுவதும் மகிழ்ச்சியால் கொண்டாடுவதும்

இயல்பானதாகும். சிலரின் சார்பாக செயல்பட்டு அவர்களுடைய இருதயங்களை மென்மையாக்கி பாவிகளை தேவனுடைய பக்கம் திருப்ப அவர்களுக்காக பரிந்துப்பேசுகிற ஒரு சிலரை தேவன் அறிந்திருக்கிறார். இவைகள் எல்லாம் சாலொமோனின் மகிமையிலும் அதிசயமான மகிமைக்கு ஒப்பாக "பல குமாரர்களை மகிமைக்கு கொண்டுவரும்படிக்கு" உள்நோக்கம் கொண்டதாகும் (வசனம் 10). தேவன் ஒருசிலரை மட்டும் இரட்சிக்க ஒருபோதும் விருப்பங்கொண்டதில்லை, ஆனால் அனைவரையும் இரட்சிக்க விருப்பம் கொண்டிருக்கிறார் (2 தீமோ. 2:4; 2 பேதுரு 3:9). தேவன் அவரிடம் சேருவதற்கு நமக்கு கொடுத்திருக்கிற முறையல்லாமல் ஒருவரும் தன்னுடைய சொந்த உணரப்பட்ட ஞானத்தால் அதை விட சிறந்த முறையை வடிவமைத்துக் கொள்ள முடியாது (யோவான் 12:32). மக்களை தேவனிடம் இழுக்கும் வழியாக சுவிசேஷத்தை பிரசங்கிப்பதே இன்றளவும் தேவனுடைய வழியாக இருக்கிறது (யோவான் 6:44, 45).

**கிறிஸ்துவின் இடத்தில் (2:11)**

மத்தேயு 25:40ல் கிறிஸ்துவிற்குள்ளான ஒரு சகோதரனுக்கு ஒருவர் உதவி செய்யும்போது கர்த்தருக்கே உதவி செய்வதாக இயேசு ஒரு அற்புதமான அறிக்கையை செய்திருக்கிறார். மற்றொரு நபருக்கு இரக்கமுள்ள செயலை நாம் செய்யும்போது "நாம் அவருக்கு கிறிஸ்துவாக மாறிவிட்டதாக" நினைத்துக் கொள்கிறோம். அப்படியல்ல, அப்படி நினைத்தால் நாம் தவறு செய்கிறோம். அந்த நபர் தான் நமக்கு கிறிஸ்துவாக மாறியிருக்கிறார்! கிறிஸ்துவிற்குள்ளான நம்முடைய சகோதரர் மற்றும் சகோதரிகளை பெரும் மதிப்பிற்குரியவர்களாக கருதி அவர்களுடைய நன்மைக்காக தனிப்பட்ட விதத்தில் தியாகம் செய்கிற நிலைக்கு செல்வோமாகில் நாம் கிறிஸ்துவோடு அடையாளப்படுத்துகிறோம். நீங்கள் கிறிஸ்துவை சந்திக்க விரும்புகிறீர்களா? அவரால் அவருடைய "சகோதரர்களாக" அழைக்கப்பட விரும்புகிறீர்களா? அப்படியென்றால் தேவையுள்ள ஒரு சகோதரியையோ சகோதரனையோ இன்றைக்கே கண்டுபிடித்து, அந்த தேவையை சந்தியுங்கள். அப்படி செய்வதின் மூலம் நீங்கள் இயேசுவிற்கு ஊழியம் செய்கிறீர்கள்!

**மரணம்: சாத்தானுடைய வல்லமையின் திறவுகோல் (2:14, 15)**

மரணம் அனைவருக்கும் உறுதியாக இருக்கிறது, ஆனால் இயேசு மீண்டும் வரும்போது இந்த பூமியின் மீது உயிரோடு இருக்கும் மனித தலைமுறையே கடைசியானதாக இருக்கிறது (எபி. 9:27; 1 தெச. 4:13-17). மரணத்தைக் குறித்து தீவிரமாக யோசிக்கும் மக்கள், அற்ப விசுவாசமுடையவர்களாக இருந்து, பகுத்தறிவற்ற பயத்தை கொண்டிருக்கிறார்கள். மரிப்பதற்கு பயப்படுதல் இயற்கையானது

ஆனால் தேவையற்றது.

நான் இளைஞனாக இருக்கும்போது என்னுடைய பாட்டியார் அவர்கள் தன்னுடைய மரணத்தை சாதாரணமாக அணுகியதைப் பார்த்து நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். அர்கன்சாஸ்லிருக்கிற சபைக்கு பின் இருந்த அவர்களுடைய வீட்டின் வாசல் முற்றத்தில் அவர்கள் அமர்ந்திருக்கையில் "நான் மரிப்பதற்கு முழுமையாய் விரும்புகிறேன். நான் காத்திருக்கிறேன். அதைக் குறித்து எனக்கு எவ்வித பயமும் இல்லை" என்று கூறினார். அவருடைய விசுவாசத்தில் அவர் எந்த நிலையிலிருக்க விரும்பினாரோ அந்த நிலையை அடைந்துவிட்டார்; அவருடைய மேய்ப்பர் "மரண இருளின் பள்ளத்தாக்கிலும் அவருடன் இருப்பார்" என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கிருந்தது. அப்போது என்னிடமில்லாதிருந்த அந்த உறுதியான நம்பிக்கை எனக்கு தேவைப்பட்டது. தற்போது முப்பத்தைந்து வருடங்கள் கழித்து, நான் அதை நெருங்கி வந்திருக்கிறேன், ஆனால் என்னுடைய விசுவாசம் அந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்று என்னால் உறுதியாகக் கூற முடியாது.

1999 ஆகஸ்டில், அதிகமான காய்ச்சலால் நான் மருத்துவமனைக்கு கொண்டுச் செல்லப்பட்டேன், ஒருவேளை நான் மரணத்தின் வழியில் போய்க் கொண்டிருப்பதாக எண்ணினேன். எப்படியாயினும் மூன்று கேரவேன் வாகனங்களில் என்னுடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் ஒரு மருமகன் உடனிருந்தனர், எப்படியாயினும் நான் மரணத்தை எதிர்ப்பார்த்திராத ஒரு மனஅமைதியை உணர்ந்தேன். "இது என்னுடைய நேரமானால், என் பிள்ளைகள் என்னுடன் இருக்கும்போது தேவன் மீது விசுவாசம் வைப்பதற்கு வேறு சிறந்த வழி எனக்குத் தெரியவில்லை." அந்த நிகழ்வும் பல ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஏறக்குறைய மரணத்திற்கேதுவான வாகன விபத்தும் மரிப்பதைக் குறித்து என்னை தீவிரமாக சிந்திக்க வைத்தது. இயேசுவிலிருந்த என்னுடைய விசுவாசமானது மரண பயத்தை அழிக்க உதவியது. நாம் வளர்ச்சியடையும்போது, நாம் மரணத்தைக் குறித்து அடிக்கடி நினைக்கிறோம். மேலும் அந்த அனுபவங்கள் ஒருவேளை தேவனிடமிருந்து வந்த ஆசீர்வாதங்களாக எண்ணப்பட்டது. எப்படியாயினும் அந்த சமயத்தில் அவைகள் கடினமாக தோன்றும் (ரோமர் 8:28). தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசம் மற்றும் தன்னம்பிக்கையானது நமக்கு தேவையான ஆறுதலை தரும்.

### இயேசு நமக்கு கொண்டு வந்ததென்ன? (2:14, 15)

சில ஆண்டுகளுக்கு முன்னர், *ரீடர்ஸ் டைஜஸ்ட்* என்ற இதழில் அந்த புத்தகத்தின் ஒரு பகுதியானது *சமாதான பிள்ளை* என்று அழைக்கப்படும் பகுதி அச்சிட்டிருந்தது.[54] இது நியு கினியாவின் காட்டு பகுதியில் ஒரு மிஷனெரி அங்கிருந்த இரண்டு எதிரெதிர் குழுக்களிடையே

சமாதானத்தை ஏற்படுத்த எப்படி முயற்சித்தாரென்பதை விவரிக்கிறது. அவர்களிடமிருந்த வெகுகாலம் அலட்சியப்படுத்தப்பட்ட "சமாதான பிள்ளை" என்றழைக்கப்பட்ட பண்டைய கலாச்சாரம் ஒன்றை அவர் கற்றுக் கொண்டார். ஒரு குழுவிலிருந்து ஒரு குடும்பத்தினர், தங்கள் எதிராளி குழுவிலிருக்கும் ஒரு குடும்பத்திடம் தங்கள் குழந்தை ஒன்றை ஒப்படைத்தனர். அதற்கு பதிலாக அந்த குடும்பமும் அதேபோன்று தங்களுடைய குழந்தைகளிலொன்றை அந்த குடும்பத்திடம் ஒப்படைப்பார்கள். இந்த பந்தம் அந்த குழுக்களை இந்த குழந்தைகளும் மூலம் ஒன்றிணைத்து சமாதானத்திற்கு உத்திரவாதத்தைக் கொடுத்தது. இந்த பாரம்பரித்தை அறிந்த அந்த மிஷனெரி இந்த ஒப்புவமையை இயேசு செய்ததற்கு பயன்படுத்தினார். தேவனுடைய சமாதானத்தின் பிள்ளையாக, அவர் இந்த உலகத்திற்கு அனுப்பி அவரை நம்முடைய பாவங்களுக்காக கொடுத்தார் மேலும் நம்முடைய பாவம் பகைத்த அவரை நம்மை சமாதான உறவில் கொண்டு வந்தார் (எபே. 2:14).

டபள்யு. பி. வெஸ்ட் ஜுனியர் அவர்கள் பின்வரும் சித்தரிப்பை பகிர்ந்தார். ஒரு தாய் சமீபத்தில் தன் குழுந்தையை இழந்த மற்றொரு தாய்க்கு ஆறுதல் சொல்ல வந்தார். அவர் அந்த துக்கத்திலிருக்கிற தாய் அனுபவிக்கிற பாடுகளைப் பற்றி அழகாக பேசினார், ஆனால் கொஞ்சம் ஆறுதலை கொண்டுவந்தார். மற்றொருவர் வந்து குழப்பம் நிறைந்த விதத்தில் பேசினார், ஆனால் இவ்வாறு கூறினார், "நான் உங்கள் துக்கம் எனக்கு தெரியும், ஏனெனில் அங்கே ஒரு சிறிய கல்லறையுண்டு, அங்கே தான் நானும் என்னுடைய குழந்தைகளை புதைத்திருக்கிறேன்." சகோரதரர் வெஸ்ட் அவர்கள் இதை இவ்வாறு விமர்சித்தார்: "அவருடைய பரிதாபம் பல அர்த்தங்களை கொடுத்தது."

இயேசு நம்முடைய மனதிற்கு சமாதான சாத்தியத்தையும், மனநிறைவையும் மற்றும் நமக்குள்ளும் தேவனோடும் திருப்தியை கொண்டு வந்தார். நாம் இதை விட ஒரு பெரிய ஆசீர்வாதத்தை கற்பனை செய்ய முடியாது. மரணத்தின் முகாந்திரத்தை எடுத்துப்போட வல்லமை வாய்ந்தது இது மட்டுமேயாகும். பின்னும் இந்த குறிப்பைப் பாதுகாக்க கூறுவதென்றால் மனிதர்களை தேவன் அவர்களை எந்த சூழலில் வாழ வைத்திருக்கிறாரோ அதில் வாழ விருப்பப்பட வைக்கிறது.[55]

உலகப்பிரகாரமான மனிதர்கள் மரணத்திலிருந்து பரிதாபமாக ஓட முயற்சிக்கிறார்கள்:

> அவர்களால் அதை தவிர்க்க இயலாதென்பதை அவர்கள் ஒருபோதும் சிந்திப்பதில்லை; மேலும் இது அவர்கள் மீது கட்டாயப்படுத்தப்படும்போது. அவர்களை எச்சரிக்கை மணியோசையால் நிரப்புகிறது. இந்த எண்ணத்தை துரத்திவிட அவர்கள் முயற்சி செய்கின்றனர். அவர்கள் (வேறு தேசத்திற்கு) பயணிக்கின்றனர்; அவர்கள் வணிகத்தில் மூழ்கி விடுகின்றனர்; அவர்கள் தங்களுடைய மனதை முக்கியமற்றவைகளால் ஆக்கிரமிக்க வைக்கின்றனர் அவர்கள் தங்கள் பயத்தை போதைப் பொருள்

பாத்திரத்தில் மூழ்க செய்கிறார்கள்: ஆனால் அனைத்தும் மரணத்தை மேலும் கொடூரமாக்குவதைப்போன்று காணப்பட்டு, அந்த உண்மைகள் வரும்போது அவைகள் மோசமானவைகளாக இருக்கிறது.[56]

"துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று ஏசாயா எழுதினார் (ஏசாயா 48:22).

ஆனால் ஒரு கிறிஸ்தவன் மரணத்திலுள்ள பிரகாசமான பக்கத்தைப் பார்க்கக்கூடும்: "நாம் மனித சக்தியின் ஆற்றல் எல்லையிற்குட்பட்ட முடிவிலிருக்கையில் ஒழுக்க ரீதியான அல்லது சரீரப்பிரகாரமான வேறு எந்த மூலாதாரங்களும் இல்லாமல் விடப்பட்டதுப்போன்று காணப்படும்போது, கிறிஸ்து தம்முடைய முழு தகுதியுடன் வாக்குத்தத்தத்தோடு தம்முடைய 'குமாரர்களுக்காக' அவர்; அவர்களை தம்முடைய இறுதி மகிமையில் கொண்டுவருவதற்காக வருகிறார்." நம்முடைய சமகாலத்தவர்கள் மனிதவாழ்வின் அழுத்தங்களோடும் அறநெறியோடும் சமாளிக்கத் தெரியாதபோது, நம்முடைய கடுமையான சோதனையின் சமயத்தில் இயேசு நமக்கு உதவிசெய்ய வல்லவராக இருக்கிறார் … "நம்முடைய ஆவிக்குரிய சரிவிலிருந்து பாதுக்காக்க அவர் தகுதி வாய்ந்தவராக இருந்து, அவருடைய மீட்கப்பட்ட பிள்ளைகளாக நம்மை நித்திய தேவனிடம் ஒப்படைப்பார்."[57] இந்த காரியங்கள் அனைத்தையும் செய்ய வல்லவராக அறிந்து மரண பயத்தை மேற்கொள்ள நமக்கு உதவி செய்கிறார்.

### "உதவிச்செய்ய வருவதற்கு வல்லவராக இருக்கிறார்" (2:18)

"உதவி செய்ய" என்ற வார்த்தை KJVயில் "ஒத்தாசை" என்றிருக்கிறது. "ஒரு அழுகிற குழந்தையின் குரலுக்கு ஓடுவது"[58] என்ற பொருளையும் அது தரக்கூடும். ஒரு அன்பான பெற்றோர் போன்று, தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவைகள் ஏற்படும்போதெல்லாம் இயேசு உதவியைக் கொண்டு வருகிறார். ஒருவேளை அந்த உதவியானது நமக்கு எப்போது தேவைப்படும்போதும் அப்போது அல்லது நாம் இப்போது இருக்க வேண்டுமென்று நினைக்கும்போது துல்லியமாக வரக்கூடாமல் இருக்கலாம், ஆனால் அது அடிக்கடி நாம் கற்பனைகூட செய்துபார்க்கக் கூடாத வழியில் நிச்சயமாக அந்த உதவி வரும். ஒரு விரிவான எடுத்துக்காட்டாக நான் சமீபத்தில் மறுபடியும் பார்த்தேன், எங்களுடைய மகள் அவளுடைய இரட்டை சிசுக்கள் பலமின்று சினுங்கும்போதெல்லாம் அதற்கு ஒத்தாசை செய்ய விரைந்து செல்வாள். அவளுடைய அடிக்கடியான சந்திப்பில் (இந்த திணற செய்கிற பணியில் அவளுடைய தாயின் ஒத்தாசையை நாடுவதற்கு) பல ஆண்டுகளுக்கு முன்னர் என் சொந்த குழுந்தைகளுக்கு நானே காட்டினதை விட அதிகமாக இந்த "விரைகிற மனதுருக்கத்தை" காட்டுகிறவனாக கண்டிருக்கிறேன்.

அதே போன்று இயேசுவானவர், நமக்கு ஒத்தாசைப் புரிகிறார், ஏனெனில் ஒருவேளை அவர் சாத்தானுடைய சோதனைக்குட்பட்டிருந்தால் (மத். 4:8, 9) சிலுவைக்கு செல்லாமல் தடுத்திருக்கக் கூடிய சாத்தானால் எது சோதிக்கப்படும் என்பதை நன்கறிந்திருக்கிறார். அவர் பேதுருவை சாத்தானின் அதே ஆவியில் விழுந்து போனதற்காகக் கடிந்து கொண்டார் (மத். 16:21-23), மற்றும் அவர் தற்போது சோதனைக்குட்படுவதை அறிந்து, தம்முடைய சீஷர்களை சோதனைக்குட்படாமலிருக்க விழித்திருந்து ஜெபிக்கும்படிக்கு வலியுறுத்தினார் (லூக். 22:39-46). நாம் சாத்தானுடைய கவர்ச்சிகளால் மேற்கொள்ளப்பட்டு, வீழ்ந்துவிடாமலிருக்க அவர் பிதாவிடம் நமக்காக பரிந்து பேசுகிறார் (லூக். 22:31, 32; எபி. 7:25).

---

இறுதிக் குறிப்புகள்

[1]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 27. [2]முற்பிதாக்களின் நெருங்கிய காலத்தில் உள்ள மாரி மற்றும் நூசியிடமிருந்து வந்த குறியீடுகள் மற்றும் கூடார விளக்கின் உதவி பழைய ஏற்பாடு வழக்கம் ஆகும். [3]James Moffatt, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* (New York: Charles Scribner's Sons, 1924; reprint, Edinburgh: T. & T. Clark, 1952), 18. [4]Several examples of this method in the teaching of Jesus, Philo, and Hebrews are given in Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 81. [5]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 76. [6]For an enumeration of those gifts, see 1 Cor. 12:4-11, 28-30. [7]James D. Bales, *Studies in Hebrews* (Shreveport, La.: Lambert Book House, 1972), 29. [8]Philo *On the Unchangeableness of God* 74; *Concerning Noah's Work as a Planter* 90; *On Drunkenness* 61. [9]Bruce, 35. [10]Jimmy Allen, *Survey of Hebrews* (Searcy, Ark.: by the author, 1980), 37.

[11]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 99. [12]உண்மையான பதம் என்பது ἐπισκέπτομαι (*எபிஸ்கெப்டோமை*) அதே இனம் ἐπίσκοπος (*எபிஸ்கோபோஸ்*) என்பதன் பொருள் பார்த்துக் கொள்பவர் அல்லது கவனித்துக் கொள்பவர். [13]Milligan, 99. [14]Warren W. Wiersbe, *Be Confident: An Expository Study of the Epistle to the Hebrews* (Wheaton, Ill.: Victor Books, 1982), 28. [15]Gerald F. Hawthorne, "Hebrews," in *The New International Bible Commentary*, ed. F. F. Bruce, H. L. Ellison, and G. C. D. Howley (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1986), 1509. [16]Wiersbe, 28. [17]Hawthorne, 1509. [18]கால்வின் போதனைகளின் 5 அடிப்படைக் கோட்பாடுகள், சொற்றொடர் வார்த்தைகளின் முதலெழுத்துகளான வார்த்தையான ("TULIP") துலிப் T = Total Depravity (மொத்த பாவத்தன்மை), U = Unconditional Election (நிபந்தனையற்ற தெர்ந்தெடுக்கப்படுதல்), L = Limited Atonement (வரையறுக்கப்பட்ட கிருபாதாரபலி), I = Irresistible Grace (தடுக்க முடியாத இரக்கம்), P = Perseverance of the Saints (பரிசுத்தவான்களின் தொடர் நிலைத்தன்மை). [19]Bruce, 43. [20]Wiersbe, 29.

[21]Bruce, 43. [22]Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* (Moberly, Mo.: Scripture Exposition Books, 1992), 28, n. 53. [23]டெலியூ என்ற வார்த்தை எபிரெய நிருபத்தில் பதினான்கு முறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கோல் பார்வை அல்லது இறுதிப் பார்வை என்று இந்த வார்த்தை அர்த்தம் கொள்ள முடியும் அல்லது நிறைவான அல்லது முதிர்ச்சியான அல்லது முழுவதும் வளர்ந்த என்று

அர்த்தம் கொள்ளலாம். பாவமற்ற பரிபூரணம் என்று இது ஒருபோதும் குறிக்காது. (Reese, 29, n. 54.) [24]"இது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நீதிநெறி தவறுகளை சீர் செய்வதாக என்பது இதன் அர்த்தம் அல்ல. அவர் பாவம் இல்லாதவராக இருந்தார் என்பது கூடாத காரியம்" (Thomas Hewitt, *The Epistle to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960], 70). [25]புறமத தெய்வங்கள் சாந்தப்படுத்த வேண்டியவைகளாயிருந்தது, ஆனால் நம்முடைய தேவன் அப்படியல்ல. மனிதகுலத்தின் மீதுள்ள அவருடைய அனபினிமித்தம் அவர் நம்மேல் கோபமாயில்லை. பழைய ஏற்பாடு யுகத்தின் கீழ் பாவமானது செலுத்திய கிரயத்தின் மூலம் நீதிமானாக்கப்படுகிறது என்பதை தேவனுடைய நீதியானது மேற்பார்வையிடுகிறது. ரோமர் 3:23-26-ன் கருப்பொருள் உடன் ஒப்பிடுவதற்கு புறமத உலத்தில் ஒன்றுமில்லை. [26]"தகப்பன்," "குடும்பம்" அல்லது "மந்தை" போன்ற வார்த்தைகள் மொழிபெயர்ப்பாளர்களால் கொடுக்கப்பட்டது, உண்மையான வாக்கியத்தில் இதுபோன்ற வார்த்தைகள் இல்லை. [27]Bruce, 45. [28]சங்கீதம் 22:18-ல் உடையின் பேரில் சீட்டு போடுதல் குறித்து மத்தேயு 27:35-ல் விசேஷமாக நிறைவேறியுள்ளது. [29]Hughes, 108. [30]காண்க 1 பேதுரு 2:8; 1 கொரி. 1:18, 23.

[31]Hawthorne, 1510. [32]இந்தக் கூற்றுகள் இரண்டு அர்த்தங்கள் கொண்டிருக்கக் கூடும், மேசியா என்ற வார்த்தைக்கு அநேக கருத்துகள் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. உதாரணமாக ஏசாயா 7:14, மத்தேயு 1:22, 23 காண்க இம்மானுவேல். ஏசாயா நாட்களில் ஒரு குழந்தை பிறந்தது அதற்கு இம்மானுவேல் என்று பெயரிட்டிருக்கக் கூடும், மேசியாவில் இன்னமும் நிறைய தீர்க்கதரிசனங்களில் நிறைவேற வேண்டியுள்ளது, அவருடைய பெயர் விவரிக்கப்படவுள்ளது. [33]Bruce, 46. Bruce's reference is to C. H. Dodd, *According to the Scriptures: The Sub-Structure of New Testament Theology* (New York: Charles Scribner's Sons, 1953), 126-38. [34]Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* (London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 52. [35]Hawthorne, 1510. [36]Quoted in Hughes, 114. [37]Ibid., 115. [38]Albert Barnes, *Notes on the New Testament: Hebrews to Jude* (London: Blackie & Son, 1884-85; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1985), 72. [39]*மிட்ராஷ் தன்சுமா. மிட்ராஷ்* என்பது வசனங்களின் பாகங்களின் தொகுப்பு ஆகும். வாக்கியங்களின் அடிமட்டத்தில் மறைந்துள்ள அர்த்தங்களை வெளிக்கொணருவதாக ரபானி விவர்ணங்கள் உள்ளன. [40]யூரிப்டஸ் மூலம் அறியப்படாத நாடக துணுக்கிலிருந்து வந்தது தான் இந்த கூற்றுகள்.

[41]Hughes, 119. [42]Hugh Montefiore, *A Commentary on the Epistle to the Hebrews*, Harper's New Testament Commentaries (New York: Harper & Row, 1964), 66. [43]James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 65. [44]Hughes, 122. [45]கிருபாதாரபலி என்பது நிகழ்காலம் ஆகும், இயேசு தொடர்ந்து கிறிஸ்தவர்களின் பாவத்தை சுத்திகரிப்பதை இது குறிப்பிடுகிறது (காண்க 1 யோவான் 1:7). கவனக்குறைவாகவோ அல்லது நன்கு அறிந்தோ நாம் பாவங்கள் செய்யும்போது, நாம் அதை அறிந்து உண்மையுடன் பாவத்தை அறிக்கையிடும்போது இயேசுவின் இரத்தம் பாவங்களை மூடுகிறது (1 யோவான் 1:8-10). [46]Dale Hulett, lecture presented at Michigan Christian College (now Rochester College), 12 March 1966. [47]Wiersbe, 31. [48]Lightfoot, 80. [49]Hughes, 111. [50]Draper, 60.

[51]யோபுவை கவனத்தில் கொள்வோம், அவன் தேவனுடைய வார்த்தையை தடுத்ததைத் தவிர்த்து மரித்திருக்கக் கூடும் (யோபு 1:6-12). [52]Wiersbe, 36. [53]Fred Guterl, "Now, That's a Bad Sunburn!" *Newsweek* 17 June 2002, 48. [54]Don Richardson, *Peace Child* (Glendale, Calif.: Regal Books, 1974). [55]Barnes, 71. [56]Ibid., 72. [57]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 73. [58]Wiersbe, 31.